
வைகாசி '90

# ஞானக்கதிர்

அன்பு-அறநெறி-ஆன்மீகம்



இந்து சமய மாத மஞ்சரி

விலை: 7/=

# 'ஷப்ரு'வை நாடுங்கள்!



தரமான கலர்ப்படப்பிரதிகள்

* அதிகுறைந்த கட்டணத்தில்
* மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச்சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்!

* நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல்

3 முதல் 5 நாட்களில் விநியோகம்

ஷப்ரு 207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 22073



இச் சமய திங்கள் இதழ் நியூ உதயன், பப்பிளிக்கேசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், 15, 2வது ஒழுங்கை மின்சார நிலைய வீதியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஞானச்சித்தம்

ஞானம்: 2 சுக்கில வைகாசி 1990 கதிர்: 5

# சமூகப் பணியில் ஆலயங்கள்

கோயில் இல்லா ஊர் பாழ்; நீறில்லா நெற்றி பாழ் என்பது தமிழ் மூதாட்டி ஔவையின் முதுமொழி.

ஊருக்கு ஒரு கோயிலாவது இருந்தால் தான் மக்களிடையே ஆன்மீக சிந்தனையை, சமய ஒழுக்க நெறிகளைப் பிரபல்யப்படுத்தலாம், பரப்பலாம், பதியச் செய்யலாம் என்று முன்னோர்கள் எண்ணினார்கள்.

வீட்டிலும் தெய்வத்தை வணங்கலாம். கோயிலிலும் ஆண்டவனைப் பூசிக்கலாம் எல்லாம் வழிபடுபவரின் மனப் பக்குவத்தை பொறுத்தது. ஞானிகளும், சித்தர்களும் திறந்த வெளியில், அகண்டு பரந்த வெளியில், கானகத்தின் நடுவிலிருந்தும் ஆண்டவனை நினைத்து தவம் இயற்றுகிறார்கள். எனினும் சாதாரண மனிதன், மனம் ஒன்றி, லயித்து தெய்வ வழிபாடு செய்வதற்கு ஆலயங்கள் உந்து சக்திகளாக விளங்குகின்றன.

பண்டைக் காலத்தில் ஊர்களின், கிராமங்களின் நடுநிலையமாகவும், ஆலயங்கள் விளங்குகின்றன. கோயிலைச் சுற்றி வர பாடசாலை, நூல்நிலையம், கலையரங்கம், விளையாட்டு மைதானம் என்பன அமைக்கப்பட்டன. மடங்கள் ஆதினங்கள் என்பன கல்வி, மெய்ஞ்ஞானம், யோகாசனம் (வைத்தியம்) ஆகியவற்றை வழங்கும் சேவை நிலையங்களாகவும் திகழ்ந்தன.

ஆலயத்தில் ஆன்மீக வளர்ச்சியும். அதனைச் சுற்றிவர ,சமூக சேவைகளும் நடை பெற்றன. இப்போது நிலை அருகி விட்டது முந்திய நிலை மீண்டும் மலர்ந்து மறுமலர்ச்சி காண வேண்டும்.


தமிழ்ப் பகுதிகளிலும் பல பிரபல்ய ஆலயங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது.

இந்த நிலை முற்றாக மாறவேண்டும். ஆலய வருமானத்தில் ஒரு சில வீதங்களையேனும் சமயப்பணிக்கும், சமூகப்பணிக்கும் ஒதுக்க வேண்டும். நலிவுற்றோர், புலனற்றோர், அனாதைகள் ஆகியோருக்கு உதவும் திட்டங்களை வகுத்து சிறிய அளவிலேனும் செயற்படுத்த வேண்டும்.

இது விடயத்தில் சமயப் பெரியோர்கள், சமய அறிஞர்கள், சமய அமைப்புக்கள் ஓரணியில் திரண்டு கவனம் செலுத்த வேண்டும். ஆலயங்களின் வருமானம் தனியார் கையில் குவியாது மக்களுக்கு பரவலாகப் பயன்பட ஒழுங்கு விதிகளைச் கையாண்டு வர வேண்டும். அதே போல ஆலயங்களின் பெயரால் நடக்கும் வீணான, வேண்டாத செயல்களையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பது மேலும் நல்லது.

ஆசிரியர்.

# அரும் பெரும் சேவை'



ஞானக்கதிர் " அன்பு, அறநெறி, ஆன்மீகம், என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு சமுதாயத்தில் இந்த விழுமியங்களைப் பரப்புவதில் ஈடுபட்டுள்ள சஞ்சிகையாகும்.

நாட்டு மக்கள் அனைவரும் ஒருவரோடொருவர் அன்பாகவும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் வாழப் பழகிக் கொள்வது இன்றைய காலகட்டத்தில் அவசியமானதே இத்தகைய நோக்கை எய்தும் விதமாக " ஞானக்கதிர் " அதன் கடமையை உணர்ந்து செயற்பட்டு, அது நாட்டுக்கு அரும் பெரும் சேவையை ஆற்றிய பெருமையைத் தட்டிக் கொண்டு விடும் என்பதில் ஐயமில்லை.

எதிர் வரும் புத்தாண்டில் ஞானக்கதிர் வாசகர்களின் தொகை மேலும் பன் மடங்கு பெருகி, அதன் மூலம் அளப்பரிய பணியாற்ற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இப்புனித பணியில் ஈடுபட்டுள்ள முகாமைத் துறையினர், பதிப்பாசிரியர் குழாம் மற்றும் ஏனைய பணியாளர் ஆதரவாளர்கள் அனைவருக்கும் பகவானின் அருள் என்றென்றும் கிடைக்க வேண்டும் எனப் பிராத்திக்கிறேன். ★

— சுவாமி சம்பிராஜ்ஞானந்தா —
(இராமகிருஷ்ணமிஷன் – கொழும்பு – 6)

# சமயப் பணி சிறக்கட்டும்

உதயன் – சஞ்சீவி நிறுவனத்தினரின் இந்து சமய மாதமஞ்சரியாம் " ஞானக்கதிர் " தமது வயதின் மாதப்பருவங்களைக் கடந்து இன்று ஆண்டொன்றினை எட்டியுள்ளமை கண்டு களிபேருவகை கொள்கின்றோம்.


நமது தாயகத்தில் மலர்ந்து, நாற்றிசைகளிலும் நன்மணம் பரப்பி நமது சமுதாயத்தில் சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வரும் இந்த ஞானக்கதிரின் சிறப்பிதழுக்கு ஆசியுரை வழங்கியதையே பாக்கியமாக எண்ணிய எமக்கு, முதலாவதாண்டு மலரையும் ஆசியுரையால் அலங்கரிக்கும் வாய்ப்புக் கிடைத்தமை மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது

பிரமோத புத்தாண்டு நமது சமுதாயத்துக்கு அமைதியையும், முன்னேற்றத்தையும், சுபீட்சத்தையும் வழங்குவதாகவும், இந்த''ஞானக்கதிர்'' முதலாவதாண்டு மலர், அவற்றை நம்மவர்கள் பெறுவதற்கான வழிவகைளை வழங்கும் ஒரு அறிவுப் பெட்டகமாகவும், அமைய வேண்டும் என்பதே எமது அவாவும் பிராத்தனையுமாகும்.

தினசரிச் செய்தித்தாள் பணியில் தனது சமூகப்பணியும், மாதாந்த மஞ்சரியாம் ஞானக் கதிராக தனது சமயப்பணியையும் ஆற்றி வரும் உதயன் – சஞ்சீவி நிறுவனத்தின் சமய சமூகப்பணிகள் மென்மேலும் வளர்ந்து நம்மிடையேயுள்ள சகல சமூகத்திற்கும் நல்ல வகையில் பயனளிக்க வேண்டுமென பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ன தேவரை மனதாரப் பிராத்தித்து நல்லாசி கூறி நிற்கிறேன். ★

சுவாமி ஜீவனானந்தன்.
மட்டக்களப்பு.

# அற்புதங்கள் நிறைந்த கண்ணகி அம்மன் வரலாறு



புங்குடுதீவின் தென் இந்து சமுத்திரக் கரையோரத்தில் கோயில்கொண்டு, நினைத்த வரம் அருளும் கண்ணகிஅம்மன் எனவிளங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள்கோயில் நானூறு ஆண்டுக்கு முற்பட்ட பழைமையுடையது. அதன்வரலாறு புதுமை நிறைந்தது.

அந்நாளில் இங்குவாழ்ந்த சைவவேளாள குல முதல்வன் ஒருவன் பெரும் மாட்டு மாந்தைகளுக்கும், எருமைகளுக்கும் உரிமையுடையவனாக விளங்கினான். காட்டுக்கு மேயச் சென்றுவரும் எருமைக் கூட்டம் ஒருநாள் திரும்பிவரவில்லை. ஏவலாளர் பல திசையிலும் தேடி கடைசியாகச் சமுத்திரக்கரையில்

எருமைகள் நிற்பதைக் கண்டு கொண்டனர். பென்னம் பெரிய பேழை ஒன்றைச் சுற்றி வளைத்துக் கொண்டு எருமைகள் நிற்பதை யுணர்ந்து ஆச்சரியமுற்றனர்,

அதிசயமும் ஆச்சரியமும் அடைந்தவர்கள் பெட்டியைக் கரைக்குத்தூக்கி வந்து பாறையின்மேல்வைத்து, திறந்து பார்க்க முயற்சித்தனர். ஆனால்,முடியவில்லை. எனவே, மீண்டும் அதைச்சுமந்து வந்து சற்று தூரத்தே நின்ற இத்தி மரத்தடியில் வைத்துவிட்டு இளைப்பாறி மீண்டும் சுமந்து கொண்டுவந்த பொழுது முன்னரிலும் அதிக பாரமாகத் தோன்றவே சுமக்க முடியாமல் அங்குநின்ற பூவரச மரத்தடியில் இறக்கிவைத்து சிறிது இளைப்பாறினார்கள். மீண்டும்பெட்டியைத் தூக்கமுயற்சித்த போது அசைக்க முடியாமல் போகவே, மற்றும் அயற்கிராம மக்களிற் சிலரை அழைத்துவந்து மிகுந்த பிரயாசையுடன் அப்பெட்டியைத் திறந்து பார்த்தார்கள்.

அதனுள்ளே பெண்கற்சிலை ஒன்றும், சதங்கை போன்ற ஆபரணமும், சிலம்புகள் சிலவும் தாமிரத்தாலாகிய ஒரு பெண்முகமும் சிறு காளிஅம்பாள் சிலைஒன்றும் இருக்கக்கண்டு அனைவரும் அதிசயமும் பயமும் அடைந்தனர் அவ்வேளையில் அங்கு நின்றபெண் ஒருவர் மீது தெய்வம் உரு ஏறித் தான் கண்ணகி ஆகிய பத்தினித் தெய்வம் என்றும், தன்னை ஆதரித்து வழிபாடு செய்வோர் அஷ்ட ஐசுவரியங்களையும், வேண்டிய வரங்களையும் பெறுவர் என்றும் கூறியது.

அதைக் கேட்ட மக்கள் அவ்விடத்திலேயே சிறு குடில் அமைத்து அன்று முதல் கண்ணகிஅம்மன் எனப் பத்தினித்தெய்வத்தை வணங்கி வந்தனர். பெட்டிக்குள் இருந்த கண்ணகி விக்கிரகமே இன்று கண்ணகி ஆலயத்தில் தென்முகமாகச் சமுத்திரத்தை நோக்கி எழுந்தருளி அடியார்களுக்கு அஷ்ட ஐசுவரியங்களையும் வழங்கிக் கொண்டிருக்கிறது. பெட்டிக்குள் இருந்த பத்திரகாளி ஆலயத்தில் எழுந்தருளி தன்னை நாடிவரும் அடியார்களின் குறைகளை தீர்த்துக் கொண்டிருக்கிறது இருந்த மற்றையபொருள்கள் பழைமையை நினைவூட்டுற வரலாற்றுப் பொருள்களாகப் பேணிக் காக்கப்படுகின்றன.

முதன் முதல் பெட்டியைக்கண்ட இடமே மாதேவர்முனை, அங்கு மாதேவர் கோவிலும், இரண்டாம் முறை பெட்டியை வைத்த இடத்தில் நாச்சிமார் ஆலயமும் சிறந்த ஆலயங்களாக அடியவர்கள் வழிபட்டு வருகின்றார்கள்.

கடைசியாகப் பெட்டியைத் திறந்து பார்த்த இடத்தில் நின்ற பூவரசமரம் ஸ்தல விருட்சமாகப் போற்றிப் பாதுகாத்து 'ஆதி கண்ணகி பீடம்' எனப் பெயரிட்டு வழிபாடு செய்யப்பட்டு வந்தது. அக்காலத்திலிருந்தே இத்தலவிருட்சம் அழியாமல் பெரிய விருட்சமாக அடியார்களுக்கு நிழலும் கொடுத்து வருகிறது.

நன்றி
ஆலய தேரோட்ட மலர்

வெயிலின் கொடுமையில்
குளிர்பானங்கள் அருந்த

நாடுங்கள்:-
"லிங்கம் கூல்பார்"
வெலிங்டன் சந்தி,
யாழ்ப்பாணம்.

பாபா கதை

# சொற்களால் மனம் மாறுமா?

பத்து மாணவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியரொருவர் ஒரு நாள் அவர்களுக்கு நல்ல விடயங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். நல்ல அந்தஸ்தும் பதவியும் வகிக்கும் ஒருவர், அந்த ஆச்சிரமத்துக்கு ஒரு நாள் வருகை தந்தார். அந்த ஆசிரியரோ அவரை வரவேற்பதற்காக ஆச்சிரம வாயிலுக்குச் செல்லவேயில்லை. பதவியும் அந்தஸ்தும் வகிப்பதால் அங்கு வந்த அம்மனிதர் ஆசிரியரின் இச்செய்கையினால் மனமுடைந்து பாடம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வகுப்பிற்கு சென்று அவ்வாசிரியரைப் பார்த்து ''நீர் ஏன் என்னைப் பொருட்படுத்தவில்லை? நீர் என்னை வந்து வரவேற்கவில்லை. நீர் என்ன செய்து கொண்டிருக்கிறீர்?'' என்று வினவினர். ''நான் மாணவர்களுக்கு நல்ல விஷயங்களை எடுத்துக் கூறிக் கொண்டிருந்தேன்'' என்று ஆசிரியர் கூறினர். ''நீர் மாணவர்களுக்கு நல்ல விடயங்களைக் கூறிவிட்டால் அவர்களது இதயத்தில் மாற்றம் ஏற்பட்டுப் புனிதமாகி விடுவார்களோ?'' என்று அங்கு வந்திருந்த மனிதர் கேட்டார். ஆசிரியர் சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ''ஏன் இல்லை!? நான் கற்பித்ததினால் அவர்களது மனம் மாற்றமடைய வேண்டிய முழு வழிகளும் உண்டு'' என்று பதிலிறுத்தார். ''இல்லை என்றால் அதனை நம்பவே முடியாது'' என்று உள் நுழைந்த மனிதர் கூற, ஆசிரியரும் ''உங்களால் நம்ப முடியாவிடின் இதில் துளியளவு கூட நம்பிக்கை உங்களிடம் இல்லை என்பதே அதன் பொருள். அதற்காக நல் விடயங்களை இச் சிறுவர்களுக்குக் கற்பிப்பதை நான் ஒருபோதும் நிறுத்தப் போவதில்லை'' என்று ஆசிரியர் கூறினர்,

தான் முக்கியமானவர் என நினைத்துக் கொண்டிருக்கும் இம்மனிதரோ ''வெறும் சொற்களால் மனதை ஒருபோதும் மாற்றமுடியாது'' என்று வாதாட முற்பட்டார். அறிவு மிகுந்தவரும் இவ்விடயங்களைப் பற்றி தெரிந்திருப்பவருமாகிய ஆசிரியர், தனது மாணவர்களில் மிக இளமையானவனை எழுந்து நிற்குமாறு கூறினர். அவ்விளம் மாணவனை அழைத்து, உள் நுழைந்த மனிதரின் காதில் விழும் வண்ணம் ''பிரியமான சிறுவனே! இங்கே பார்! இந்த மனிதரின் கழுத்தைப் பிடித்து கதவிற்கு வெளியே தள்ளிவிடு'' என்று கூறினர். இவ் வார்த்தைகளைக் கேட்டதும் தான் தாமதம், வந்த மனிதர் முழுப் பதற்றமடைந்து, கண்கள் சிவந்து, மிக்க ஆத்திரத்துடன் ஆசிரியரைக் கையோங்கும் வண்ணம் வந்தார்.

அப்பொழுது ஆசிரியர், ''நீங்கள் கோபங் கொள்ளுமாறு என்னதான் நடந்துவிட்டது. நாங்கள் உங்களைக் கையோங்கவில்லை. உங்களை வெளியே தள்ளிவிடவில்லை. நான் இம்மாணுக்கனுக்கு கூறிய சொற்களே இக் கோபத்தைக் கிளரச் செய்த ஒன்றேயொன்றாகும். வெறும் சொற்களால் மாத்திரம் மனதை மாற்ற முடியாது என்று கூறிய நீங்களே, நான் மாணுக்கனுக்கு கூறிய இவ் வெறும் சொற்கள், உங்கள் மனத்தை மாற்றி, உங்களுக்குப் பதற்றத்தை ஏற்படுத்தியதற்குக் காரணம் தான் என்ன? ஆகவே, வெறும் சொற்களால் மனதை மாற்ற முடியாது என்று கூறுவது மிகத் தவறாகும். வெறும் சொற்களால் எவ்வித பதற்றத்தையும் ஏற்படுத்த முடியும். வெறும் சொற்களால் எவ்வளவு வேண்டுமெனினும் அன்பு கொள்ள முடியும். வெறும் சொற்களால் எவராயிருப்பினும் அவரது கருணையைப் பெற்றுக் கொள்ளலாம்'' என்று பதில் கூறினர்.

ஆகலால், இவ்வுலகில் நட்பை நீங்கள் ஊக்குவிக்க வேண்டுமாயின், இனிமையான வார்த்தைகளை உபயோகித்தும், இனிமையான வகையில் பேசியும், புனித விடயங்களைப் பற்றிப் பேசியும் நீங்கள் சாதனை செய்ய முடியும். இதற்கு மாறாக கடும் சொற்களை நீங்கள் கையாண்டால், இவ்வுலகில் நட்பை, உங்களால் ஒருபோதும் ஊக்குவிக்க முடியாது.

— ஞா: குகஞானி

# யானையை அடக்கிய இளைஞர்

பெங்களூரிலிருந்து மைசூர் செல்லும் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சிறுகிராமம் செஞ்சனஹெல்லி, இந்தக்கிராமத்தின் இதயம் போன்ற ஓரிடத்தில் அழகிய சோலை ஒன்று அமைந்திருக்கிறது. கமுகும், தென்னையும். செண்பகமும் முல்லையும் இணைந்து அழகிய சோலைக்குப் பசுமையும் மணமும் தருகின்றன. செம்பருத்தியும் செவ்வரளியும் வண்ணம் சேர்க்கின்றன.

இந்தச் சோலையின் நடுவில் அமைதி உறையும் பர்ணசாலை ஒன்றிருக்கிறது. அருள் ஒளி பெருக்கும் ஞானச்சுடரான சிவரத்தின புரி என்னும் ஞானப் பெயர் கொண்ட சற்குரு திருச்சி சுவாமிகள் இங்கேதான் எழுந்தருளி இருக்கிறார்கள்.

நாங்கள் ஆறுபேர் ஒருமுறை வாடகைக் கார் ஒன்றில் பெங்களூர் மைசூர் சாலையில்செல்லும் போது எமது மோட்டார்ச் சாரதி இது தான் திருச்சி சுவாமிகளின் ஆச்சிரமம் என்று ஆச்சிரமத்தில் கொண்டு சென்று நிறுத்தினார்.

சுவாமிகள் முன்னிலையில் ஐந்துபேர் வரையில் இருந்தார்கள், சுவாமிகள் கன்னட மொழியில் பெரியபுராண சரிதத்தைச்சொல்லிக் கொண்டிருந்தார்கள். அன்று இளையான் குடிமாறனாரின் சரிதம் தொடர்ந்தது.

கதை முடியும் வரை நாங்களும் அவர்களுடன் அமைதியாக இருந்தோம்.

''சுவாமிகள் எங்கிருந்து வருகிறீர்கள்?'' —என்று கேட்டார்கள்.

''நாங்கள் சிலோனிலிருந்து வந்திருக்கிறோம்'' — என்றோம்,,

''சிலோனில் எந்த இடத்திலிருந்து வந்திருக்கிறீர்கள்?

நாங்கள் நாவலப்பிட்டியிலிருந்து வந்திருக்கிறோம்''

''நாவலப்பிட்டி கண்டிக்குக் கிட்டவா?''

''கண்டியிலிருந்து 23 மைல் தூரம்தான்.

''கண்டியில் யானை குளிப்பாட்டும் இடம் தெரியுமா?''

''ஆம் சுவாமி.''

''நானும் ஒரு காலத்தில் கண்டியில் சில நாட்கள் வாழ்ந்தவன்தான்''

கண்டியில் உள்ள பெரிய புத்த கோயில் தலதா மாளிகையாகும், கோயிலுக்கு மகாவலி என்ற ஆற்றிலிருந்து யானை ஒன்று தண்ணீர் எடுத்து வருவது வழக்கம் ஒருநாள் தண்ணீர் எடுத்து வரும்போது யானை மதங் கொண்டு பாகனைக் கொன்றுவிட்டது. மதங் கொண்ட யானை தெருவழியே வரும்போது மக்கள் எல்லோரும் பயத்தினால் ஓடிப் பதுங்கினர், வீதியெல்லாம் அல்லோல கல்லோலப் பட்டது.

ஆத்மஜோதி நா, முத்தையா

ஓர் இளைஞர் யானையை நோக்கி கை உயர்த்திய படியே வந்தார், மதங்கொண்ட யானை பெட்டிப் பாம்புபோல் அடங்கிவிட்டது. வந்தவரை யானை விழுந்து வணங்கி வரவேற்றது. துதிக்கையால் தூக்கி மத்தகத்தின் மேலே வைத்துக் கொண்டது. இந்தக்காட்சியை மக்கள் எல்லோரும் ஆனந்தத்துடன் கண்டு களித்தனர்.

நாமும் கதைகேட்ட ஆவலில்'' அந்த இளைஞர் யார்?'' —என்று வினவினோம்.

''அவர்தான் திருச்சி சுவாமிகள்'' —என்று சிரித்துக் கொண்டே கூறினார்கள்.

எங்கள் அறுவருக்குமாகச் சிறிது நேரம் தமிழிலே பேசினார்கள்.

''பெரியபுராணம் ஒருவரலாற்றுக் காவியம்'' அத்துடன் ஆத்மீக வாழ்வை உண்மை அடியவர்களின் உண்மைச் சரித்திர மூலம் விளக்குவது, தமிழ்மக்களுடைய பண்பாட்டை நல்ல முறையில் விளக்குவது பெரிய புராணம் என்று கூறலாம், பெரிய புராணம் என்பதற்கு இரண்டு வகையில் பொருள் கூறலாம். இதில் உள்ள ஒவ்வொரு நாயன்மாருடைய வரலா

## ஞானியர் தரிசனம்

றும் புராணம் என்ற பெயரோடு அமைந்துள்ளது, அவ்வாறு பல புராணங்களைத் தன்னகத்தே உடைமையால் இது பெரிய புராணம் ஆயிற்று என்பது ஒன்று. மற்றொன்று பெரியவர்களாகிய நாயன்மார்களுடைய வரலாற்றைச் சொல்லும் புராணம் என்பது,

நாயன்மார்கள் இறைவனை வழிபடுவதில் பேரின்பத்தை அடைந்து ஜீவன் முத்தர்களாக விளங்கினார்கள். அவர்கள் இறைவனை அன்போடு கும்பிடுவதையல்லாமல் வீடுபேற்றையும் விரும்புவது இல்லை."

"கூடும் அன்பினிற் கும்பிடவே அன்றி.

வீடும் வேண்டா விறலின் விளங்கினார்" என்பது சேக்கிழார் வாக்கெனக் கூறி முடித்தார் சுவாமிகள்.

## நற் சிந்தனை!

"இறைவன் நெருங்கி நிற்கிறான், அவனைப் பக்கத்தில் நிறுத்திக்கொண்டு அந்தரங்க தோழனாக்கிக் கொள்! எந்த சமயத்திலும் அவனை உன் கண்ணுக்கு முன் வைத்துக் கொண்டு, செய்யும் எல்லாச் செயல்களையும், எண்ணும் எல்லா எண்ணங்களையும், அவனைத் துணைவனாக வைத்து கொண்டு, வாழ்க்கை நடத்துவதை தினசரி வழக்கப்படுத்திக் கொள்."

தொகுப்பு:
அ. திருமொழி அழகன்,
சாவகச்சேரி.

● எவர்சில்வர்,
● பிளாஸ்ரிக்,
● அலுமினியம்,
● கண்ணாடிப் பொருட்களை

மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக் கொள்ள ...

# ராஜா ரேட் சென்றர்

3, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# காது, மூக்கு குத்துவதேன்?

தோடுடைய செவியன் சங்கவெண் குழையோர் காதுடையவன் சிவபெருமான், வேதகாலம் முதல் கடவுளர், தேவர்யாவரும் காது வடித்துக் கனங்குழை பூண்டிருந்தனர், பழைய காலத்தில் அரசர் முதல் முனிவர் வரை கர்ணகுண்டலங்கள் அணிந்தனர், புத்தர், மாணிக்கவாசகர் சிலைகளைப் பாருங்கள். காதுகள் குத்தப்பட்டதோடு அமையாது பாரமான ஆபரணங்கள் பூண்டமையால் சோணைத் துளைகள் பெருத்துத் தோள்வரை நீண்டு தொங்குவதையே காணலாம்.

சுபமுகூர்த்த சுபவேளையிலே பொன்னூசியினால் குத்தித் துளையிடுவதன் மூலம் அவை பிந்துவாற் பூரணமாகி ''ஓம்'' என முழுமை பெறுகின்றன அதனால் ''சத்'' சம்பந்தமான உயர் கருத்துக்களை உள்விடும் ரஷையாகக் காதுகள் மாறுகின்றன, ஆண், பெண் பேதமின்றி அனைவருக்கும் தெய்வ சந்நிதியிலே காது குத்தப்படவேண்டும், காது துளைபடும்வேளை அங்கே சில நாடிநரம்புகள் அருட்டப்படுகின்றன. அது குழந்தைக்கு வருங்காலத்திலே பக்தி ஞான வைராக்கியாதிகள் விருத்தி பெறவும். ஆத்ம ஞானத்தில் திளைக்கவும் சாதகமாய் அமைகிறது.

## சைவச் சிறுருக்குக் காது குத்துவதேன்?
## பெண்பிள்ளைகளுக்கு மூக்குக் குத்துவதேன்?

இன்றைக்கோ சிவாச்சாரியர் சிலர்மட்டும் கடுக்கன் பூண்டுள்ளனர். இற்றைக்கு நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு எல்லாரும் காது குத்தியிருந்தனர். அதிலும் பிராமணர், பொற்கொல்லர், நாதஸ்வர தவிற் கலைஞர்கள் எல்லாம் தம் காதுகளைத் துளைசெய்து வைரக்கடுக்கனும் தோடும் போட்டிருந்தனர். இன்றோ நேர்த்திக் கடனுக்காக அன்றிக் காதுகுத்தும் ஆண்பிள்ளைகளைக் காண்பது அரிதாகும். இந்நிலை மாற்றியமைக்கப் படவேண்டும். காதுகுத்துவதுபூணூரம் பூட்ட மட்டும்மல்ல. நம்முன்னோரின் பழக்க வழக்கங்களுக்கான காரணங்களை அறிந்துகொண்டால் காதுகுத்தும் பழைய வழக்கம் மீண்டும் நிலைபெறும் என்பது உறுதி.

இயற்கையிலேயே ''ஓ'' வடிவிற் பிரணவ ரூபமாய் அமைந்துள்ள செவிகளில்

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில், பெரியாழ்வார் கண்ணனின் காதுகுத்தல் பற்றிப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அதிலே ''காதில் திரியிடல்'', 'வார் காது தாழப் பெருக்கி மகரக்குழையிடல்', 'காதில் கனகக் கடிப்பிடல்'', '' தலை நிலாப்போதே காதைப் பெருக்கல்'', ''காதில் வைரக்கடிப்பிடல்'', ''காதில் கடிப்பை நோவாமே திரித்தல் என்றெல்லாம் காதுகுத்தல் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

— இளம்பூரணி —

மூக்குத்தி இல்லாத மங்கையர் முகம் நட்சத்திரம் இல்லாத வெற்றுநள் வானம். காஞ்சிகாமாட்சியையும் மதுரை மீனாட்சியையும் கன்னியாகுமரித் தெய்வத்தையும் மூக்குத்தியினின்றும் வேறுபடுத்தி நினைக்கவே முடியாது. குடும்ப விளக்காய் ஒளிரும்

இல்லத்தரசிகளின் வதனங்களில் சதா லக்ஷ்மீகரம் குடிகொண்டிருக்க அடக்கமாக மின்னி மிளிரும் மூக்குத்தி ஆதாரமாய் அமைகிறது

இந்து மதத்தின் உயர் பண்பும் பாவனைகளும், திருமண காலங்களிலேதான் சிகரத்தை எட்டிப் பிடிக்கின்றன. மணவாளக் கோலத்திலேதான் விஷேமான அலங்காரங்களைத் தக்கவிளக்கத்தோடும் கருத்துக்களோடும் அணிவிக்கிறோம். மணமகன் ஈசுரன். மணமகள் பராசக்தி. இவ்வாறு ஈருயிர் ஒருயிராகுஞ் சிவசக்தி நிலையிலே மணமக்கள் சர்வாலங்கார பூஷிதர்களாய்க் காட்சிதருவர். அவ்வேளை ஏனைய பல கனகாபரணங்களுடன் மணமகனுக்குக் காதுகளிற் கடுக்கனும், மணமகளுக்குக் காதுகளிலே பரந்து பொலிந்த புதுத்தோடு ஜிமிக்கி, மாட்டல் என்பவற்றுடன் மூக்கிலே பேசரி, நத்து, புல்லாக்கு என்பனவும் அணியப்படுகின்றன. இம்மங்கல அணிகலன்களைப் பூட்டுவதற்கு ஆண்கள் காது குத்துவதும் பெண்கள் காது, மூக்கு இரண்டையும் குத்துவதும் அவசிய தேவையாகிறது.

மூக்கைக் குத்துவது மாடுகளுக்கு மூக்கணாங்கயிறு (நாணயம்) கோர்ப்பது போல என்றும் மூக்குத்தி பெண்ணடிமைச் சின்னம் என்றும் எள்ளி நகையாடி விதண்டாவாதம் பேசி, குத்திய தமது மூக்குத் துளைகளைத் தூரவிட்ட பெண்களும் ஓர் இடைக்காலத்தில் இருந்தனர். ஆனால் நாகரிகச் சக்கரம் சுழன்று வருகிறது. இன்று மூக்கின் இருபுறமும் காதின் மேற்சோணை, மடல் விளிம்புகளிலும் கூடத்துளைத்து பூணாரம் பூட்டுவதைக் காண்கிறோம். தாய்மார் மூக்குக் குத்தாது இருக்க, இன்றைய இளமங்கையர் பலர் தாமாக முன்வந்து மூக்குக்குத்தி நம் முன்னோரளித்த அரும் பண்புக்குப் புத்துயிரூட்டி வருகிறார்கள். பெண்பிள்ளைகளின் மூக்கைக் குத்துவதனால், இயல்பாகவே அவர்களிடம் உள்ள மூர்க்ககுணங்கள் இல்லாது ஒழிவதாயும், சிலவகை நோய்கள் அணுகாதென்றும் கூட நம்பிக்கை உண்டு. ஊசிகுத்தி நாடிநரம்புகளைத் துடிப்புடன் தொழிற்படவைக்கும் சீன அக்கியுபங்சா வைத்தியமுறை பிரபலமாகும் இன்றைய காலத்தில் காது, மூக்குக்குத்துவதற்கு அனுகூலமான கண்டுபிடிப்புகள் தோன்றவும் கூடும்.

தைப்பூசத் திருநாளிலே நம் நாட்டிலே சைவச் சிறுருக்குக் கர்ணவேதனம் செய்கிறோம் பெண்பிள்ளைகட்கு மூக்குக்குத்துகிறோம். இவற்றை நகைக் கடைகளிலன்றி நயினை நாகபூஷணி, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் போன்ற கோயில் சந்நிதிகளில் செய்தல் நன்று. சிவதீட்சைவைக்கும் நம் சிறுருக்கு அதற்கு முன்பாகக் கர்ணவேதனஞ்செய்வதையும் சமயஸ்தாபனங்கள் கவனிப்பது நல்லது. இந்து இளைஞர் மகளிர் மன்றங்களின் உறுப்பினர் ஆண் பெண்பேதமின்றிச் இச்சடங்காசாரங்களைத் தாமும் மேற்கொண்டு சைவசமூகத்திலும் பரவும் வகை செய்தல் வேண்டும்.

வாழ்க சைவத்தமிழ்ப் பண்பாடு.!
வளர்க நம்முன்னோரளித்த அர்த்தமுள்ள மரபுகள் !!

# ஞாயிறு பதிகம்

ஆயிரம் நாமத்தில் அர்ச்சனை செய்தேன் அடிபணிந்தேன்
தாயினும் அன்புபொழிந் தென்னைத் தாங்கும் தமிழரசி
பேயும் பிணியும் றையும் போக்கி விளங்கிடுவாய்
ஞாயிறு தோறும் வருவாய் சிவலோக நாயகியே.!

# திருவடி வணக்கம்

உருவாயும், அருவாயும், அருவுருவாயும் விளங்கும் அம்மையப்பன் ஆன்மாக்களை ஆட்கொள்ளுவதற்காகப் பல பல வேடமாகினர், அவர் எடுத்த திருவுருவங்கள் எண்ணிலாவாயினும் எவ்வுயிருக்கும் இன்றியமையாத ஆசாரமாக விளங்கும் பாதாரவிந்தமே, திருவடியே சாலச் சிறப்புடையதாகும். பிறப்போடிறப்பெனும் சித்த விகாரக் கலக்கந் தெளிவிப்பது திருவடியே. பிறவிப்பிணி அகற்றுவதும் பீடுடைய பெரு வாழ்வு அளிப்பதும் திருவடியே "முத்தி தான்ற மலர்ப்பதத்தே நாடு" என்ற மூனிமொழி உன்னவேண்டியது. இறைவன் திருவடியை நாடுபவர்கள் அடியவர்கள். இறைவன் திருவடியை அடைந்தவர்களே அடியார்கள். இறைவனே யாவரிலும் சிறந்த அடியான். அடியார்க்கு அடியான் அவனுதலினுலேயே தன் அடியாராகிய சுந்தரருக்குக்காக பரவையாரிடம் தூது சென்றவன். இதனுலன்றே "அடியார்க் கெளியவன் அம்பலவாணன்" என்பர்.

ஈழத்திலே இன்று யாழ்ப்பாணம், செங்கலடி சிவதொண்டன் நிலையங்களிற்றான் திருவடி வழிபாடு செவ்விய முறையில் நடைபெற்று வருகின்றது தொன்றுதொட்டு தமிழர், சிங்களவர், கிறீஸ்தவர், சோனகர் யாவராலும் திருவடி வழிபாடாற்றப்படும் மற்றொரு புனித பூமி சிவனொளிபாத மலையாகும்.

கொழும்புத்துறை யோகசுவாமிகள் ஆச்சிரமம், நல்லூர் செல்லப்பசாமி நினைவாலயம், கைதடி மார்க்கண்டு சுவாமிகள் ஆச்சிரமம் ஆகியவற்றிலும் திருவடி வணக்கமே முதலிடம் பெறுகின்றது. சிவதொண்டன் நிலயத்து திருவடிவணக்கம் "எங்கும் மங்களம்" தங்கவேண்டும் என்னும் பெருநோக்குடைய யோகசுவாமிகளின் ஆசிர்வாதத்தாலும் ஆணையாலும் நிறுவப்பட்டது, சுவாமிகள் கொழும்புத்துறைக் கொட்டிலில உறைந்த பொழுது தவருது திருவடி பூசை செய்து வந்தார்.

வருஷாவருஷம் பங்குனி மாதத்து இரண்டாவது திங்கட்கிழமையில் திருவடி பூசை தினத்தை அமைதியாக அநுட்டித்து வந்தனர். அவ்வாருன ஒரு திருவடி பூசைதினத்தில் யாழ் சிவதொண்டன் நிலயத்தில் வழிபாடாற்றி வந்த அன்பர் அன்றிரவே (1964 பங்குனி 2ம் திங்கள்) சுவாமிகள் மகா சமாதியடையக் கூடுமென உள்ளுணர்வுந்தக் கொழும்புத்துறை சென்றனர்.


திருவடி பூசை தினமும், மகாசமாதி தினமும் மற்றும் ஞானோதயதினமும் ஒரு நாளாக அமைந்திருக்தலன்றே திருவடி பூசையின்மகத்துவத்தை விளக்க போதியதாகும்.

ம. சிவயோகசுந்தரம்

## புகலிடம்

நம்முதாதைகள் இறைவனைத் தொழுக தொழுக எனக் கூருமல் அவனது தாள்களைத் தொழுகதொழுகஎனக் கூறியதன்நுட்பம்நோக்கற்பாலது. இறைவனே அளவிடற் கரியவன். அவனது தன்மையின் ஒரு சிறு கூற்றையே உயிர்கள் அறிந்து அணுக முடியும் என்னும் நுட்பமே இதனுட் பொதிந்திருக்கின்றது.

"நின்னளந்தறிதல் மன்னுயிர்க்கு அருமையின்" என்னும் நக்கீரர் வாக்குப்படி இறைவனை அளந்தறிதலென்பது உயிர்களுக்கு என்ஞான்றும் முடியாத காரியம் அளந்தறிய ஒண்ணுதவனை ஓரளவு அறிந்து வழிபடுதலே திருவடி வணக்கம் என்பதன் உட்கிடையுமாகும். "நின்னிற் சிறந்த நின் தாள் இணையவை" என்னும் பரிபாடலும் இதனை வலியுறுத்தும். ஞானிகளனைவரும் இறைவனது திருவடியைச் சிறப்பித்து அதனையே தமக்குப் புகலிடமாகக் கொண்டு உயர்ந்துள்ளனர் இவர்கள் நிரலில் முதன்மையாக வைத்துப்போற்றத்தக்கவர் திருவள்ளுவப் பெருந்தகையாவர். அவர் திருக்குறளில் கடவுள் வாழ்த்து என்ற தலைப்பின் கீழ் இறைவனது திருவடியை ஏழு இடங்களில் குறித்துள்ளார்.



தலங்களில்

சைவப் பெருந்தலங்களுள் தொன்மையும் மேன்மையும் ஒருங்கே பெற்றுத் திகழும் சிதம்பரம், திருச்செந்தூர், பழனி, மதுரை ஆதியாம் இடங்களில் திருவடி வணக்கமே மூலமாகத் திகழ்கிறது. அதிகாலையில் பள்ளியறையிலிருந்து திருவடி எழுந்தருளி வந்த பிறகே நாட்பூசை முதலானவை ஆரம்பமாகிறது. நாள் முடிவிலும் அர்த்தசாமப்பூசை திருவடிபள்ளியறைக்கு வந்த பின்னரே நடந்து முடிகிறது.

மறை ஞானசம்பந்தர் சமாதி விளங்குமிடத்திலும் திருவடிக்கே எல்லா வகையான பூசைகளும் நடைபெறுகின்றன.

வட இந்தியப் புனித தலங்களுள் ஒன்றான கயையில் உள்ள விஷ்ணு பாதம் மிகப் பெரியதாகும். வைஷ்ணவமதத்தில் கருடாழ்வாருக்கு "பெரிய திருவடி" என்றும், ஆஞ்சநேயருக்கு "சிறிய திருவடி" என்றும் பெயர்கள் வழங்குகின்றன. வைஷ்ணவ கோவில்களில் இறைவனோடொன்றி விட்ட நம்மாழ்வார் சடகோபரின் திருவடிப்பரிசம் நமக்கு ஏற்படவேண்டும் என்பதற்காகவே இவரது இரு பாதங்களையும் தலைமீது முட்ட வைத்து எடுப்பார்கள். சில கோவில்களில் விஷ்ணு பாதத்திற்கும் சிவ பாதத்திற்கும் கோவில் மூலஸ்தானத்தை விட தனியாக சன்னிதிகள் உள. சிவனொளி பாதமலையிலும் பெரியதொரு திருவடி உள்ளது.

ஆதி சங்கராச்சாரிய சுவாமிகளால் நிறுவப்பட்ட திருமடங்களிலும் திருவடிக்கே அபிஷேகம், பூசை முதலியவை நிகழ்கின்றன.

அனுபூதிமான்கள் யாவரும் இறைவனது திருவடி தீக்கை பெற்றவர்களேயாவர். அதனாலன்றோ வள்ளுவர் தொடக்கம் வள்ளலார் வரை வந்தவதரித்த அடியார்கள் யாவரும் திருவடிப் புகழ்ச்சித் திருப்பாசுரங்கள் பலபாடி

உள்ளார்கள். தீக்கை வகை யாவற்றுள்ளும் திருவடித் தீக்கையே சிறந்ததென்பர்.

இறைவனின் திருவடிப்பெருமை அவனைப் பக்தி செய்யும் அடியார்களின் பெயரினால் நன்கு விளங்கும். இறைவனின் எல்லா உறுப்புக்களையும் பார்த்து வணங்கும் அன்பர்களை ''எண் சாண் உடம்பிற்கும் சிரசே பிரதானம்'' என்றபடி கடவுளின் திருமேனியின் உறுப்புக்களுள் சிறந்த தலையின் பெயரால் ''தலையார்'' என்று அழைப்பதில்லை எல்லா உறுப்புக்களுள்ளும் கண்களே ஏற்றம், கண்ணிற் சிறந்த உறுப்பில்லை என்றபடி கண்ணின் பெயரால் ''கண்ணார்'' என்று அழைப்பதில்லை வேதம் சொன்ன திருவாயின் பெயரால் ''வாயார்'' என்று கூறுவதில்லை வேறு எந்த உறுப்பின் பெயராலும் வழங்காமல் எல்லாவற்றிற்கும் மூலமான திருவடியின் பெயரால் ''அடியார்'' என்றே வழங்குவதைப் பார்க்கிறோம்.

மற்றைய தெய்வங்கள் தங்கள் அபயகரத்தாலும், வரத கரத்தாலும் செய்ய வல்லன. எல்லாவற்றையும் தேவியின் இரு பாதங்களுமே செய்யவல்லன.

ஆதி சங்கரர் தேவியின் பாத துளி மகிமையைப்பற்றியே சவுந்தரிய லகரியில் சில சுலோகங்கள் செய்துள்ளார்.

### உருவம், அருவுருவம்

எல்லாவற்றிற்கும் மேலாக, ஈசனின் திருவடிகளை மட்டும் வழிபடுவதில் எந்தவிதமான சண்டை சச்சரவுகளுக்கும் இடமில்லை திருவடிகளை மட்டும் பார்த்தால் அவை சிவனார் திருவடிகளோ அல்லது விஷ்ணுவின் திருவடிகளோ அல்லது தேவியின் திருவடிகளோ என்ற வேறுபாடின்றி யாவர்க்கும் பொதுவாக ஒன்றாகக் காணலாம்.

இதனால் திருவடியை இறைவனின் அருவுருவத் திருமேனியாகக் கொள்ளலாம். பாதங்களுக்கு ஒருவரி வடிவம் இருப்பதால் உருவத் திரு மேனியாகவும், பாதத்தை உடையவருடைய உருவம் வெளிப்படாமையால் அருவத் திருமேனியாகவும் அமையும் சிறப்பினை நோக்குக.

குரு சீடனுக்கும், ஆண்டவன் அடியானுக்கும் செய்யும தீக்கைகள் பல. அவை பரிச தீக்கை, மந்திர தீக்கை, நயன தீக்கை, மானச தீக்கை, பிரணவ தீக்கை எனப் பலவாகும். இவற்றுள் திருவடி தீக்கை மிகச்சிறப்புடையதும் முக்கியமானதுமாகும். நால்வர் ஆழ்வார்கள், அருணகிரிநாதர், இராமலிங்க சுவாமிகள், அபிராமிப்பட்டர் முதலாய அடியார்கள் எல்லாம் திருவடி தீக்கை பெற்றவர்களே.

ஆகவே திருவடி வணக்கத்தின் உட்கிடையையும் சிறப்பையும் பயனையும் அறிந்து சிந்தையால் திருவடிப் பூஜை செய்து திருவடிக் கீழ் சில தொண்டு செய்து கிடப்போமாக.

''ஒரு பொல்லாப்புமில்லை யென்றென உள்ளம்
குளிர வைத்த
குருநாதன் திருவடியைக் கும்பிடவா என்
மனமே''

— நற்சிந்தனை—

★

## காலையில் கடவுளை வணங்குவது எப்படி?

இந்த உலகின் மகா பிரபுவே! உன்னைப் பணிந்து வணங்குகின்றேன் நீயே எனது குரு. எனது உண்மையான தாய் நண்பன், வழிகாட்டி, அனைவரும் நீயே! என்னைக் காப்பாற்று. நான் உன்னுடையவன். எல்லாம் உன்னுடையவை.

போற்றுதலுக்கு உரிய இறைவா! உன்னை வணங்குகுறேன். எனக்குத் தெரிந்த அறிவைக் கொடு. என்னைத் தூய்மைப்படுத்து எனக்கு ஒளி, பலம், ஆரோக்கியம், நீண்ட வாழ்வு அனைத்தும் தருவாயாக!

எல்லாம் வல்ல எம் பெருமானே! எனது தீய குணங்களை எல்லாம் அகற்றி விடு. என்னை நற்குணம் படைத்தவனாக ஆக்கு. என்னை ஒரு தேச பக்தனாக ஆக்கு. நான் எனது தாய் நாட்டின் மீது அன்பு செலுத்த அருள் செய்வாயாக!

— சண். சொக்கலிங்கம்

# மறவாதே குலதெய்வ வழிபாடு

மறவாதே குலதெய்வ வழிபா(டு)உன்னை
வாழ்விக்கும் மந்திரமும் மருந்தும் அஃதே
உறவாடும்: நடமாடும் உள்ளக் கோயில்
ஒளிவிளக்காய் குலதெய்வம் உன்னைக் காக்கும்:
முறைபிறழ்ந்த வழிபாடாய் இருந்து விட்டால்
முன்நோக்கிப் பின்நோக்கி அயலும் நோக்கி
அறமான வழிதேடி அகத்தால் போற்றி
அன்பென்னுந் திருவமுதம் படைத்துக் கொள்வாய்!
உருவமற்ற வழிபாடாய் அமைந்து நின்றால்
உனக்கதுவே பெரும்பேறும்: படமும் வேண்டாம்
திருவிளக்கைத் தினந்தோறும் ஏற்றிக் கொள்வாய்
சிவாயநம என்று திரு நீற்றைப் பூசு.
வருங்கால நிகழ்வுதாம் தோன்றி நின்றால்
மற்றவர்க்குச் சொல்லாதே நீயே எண்ணி
அருள்பெருக்க வழியறிந்து குருவைத்தேடி
ஆராத அன்புடனே வழிபா(டு) ஆற்றே!

— அல்வையூர் மு. மயில்வாகனம்

தலைமுறையாய் வந்தவொரு வழிபாடென்றால்
தவறின்றிக் கடமைகளைச் செய்து கொள்வாய்
நிலையான இவ்வாழ்வுக்(கு) ஏதுவான
நிதிகிடைக்கும்: பதிகிடைக்கும்: சுற்றம் போற்றும்
மலைபோல வருகின்ற தீமை யாவும்
பனிபோல விலகிவிடும் மறக்க வேண்டாம்
விலைகூறிப் பொங்கவிட்டு வேண்டிடாமல்
வேண்டுதல் செய்: பொங்கலிடு: திருப்தி ஆகும்!
முடிசூடும் மன்னர்களும் குலதெய்வத்தை
முறையாகத் தொழுதுவந்த இயல்பு நோக்கி
அடிஅடியாய்க் குல தெய்வ வணக்கஞ் செய்தால்
அக்குடியில் ஒருஞானி வந்து(உ)தித்துக்
குடிகுடியாய்த் தொடர்ந்துவரும் பழி பாவத்தைக்
குறைந்துவிடச் செய்திடுவான்: அருள் நிறைப்பான்
விடியலிலே தோன்றுகின்ற கதிரோன் போல
மிக்கபுகழ் ஓங்கிடவே செய்வான் நன்றே'

இலட்சிய ஆசிரியர், இலட்சிய மாணவர் ஆகியோர் எவ்வாறு விளங்க வேண்டும் என்ற செயல் வடிவான ஒழுக்கங்களையும் இந்துக் கல்வி மரபு உருவாக்கியது. ஆசிரியர் பேராற்றல் உடையவராய் இருத்தல் வேண்டும் என்பதும், மாணவர் கருத்துச் சுதந்திரம் உள்ளோராய் இருக்க வேண்டும் என்பதும் இந்துக் கல்வி மரபிலே உருவாக்கப்பட்டன. இந்த மரபு அறிவினைப் பெறும் வழி வகைகள் பற்றியும் விளக்கியது.

# வேதாந்த மரபு

— கலாநிதி சபா ஜெயராசா —

மெய்ப்பொருள் தேடல் வேதாந்தக் கல்வி மரபில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. உபநிடதங்கள், பிரமசூத்திரம், பகவத்கீதை முதலிய வேதாந்த மூல நூல்கள் மெய்ப் பொருள் தேடலை மொழிகின்றன. அறியாமையிலிருந்து விடுபடுதற்கான உபாயங்களை இந் நூல்கள் தருகின்றன. மெய்மையை இனங்கண்டு கொள்ள முற்படும் பொழுது பிரமத்தின் தரிசனத்தையும் வியாபகத்தையும் வேதாந்தக் கல்வி மரபு கூறுகின்றது.



சங்கரர்

வினா மரபு வேதாந்தக் கல்வியிற் சிறப்பிடம் பெறுகின்றது. அழிந்து விடக் கூடிய உலகப்பொருட்களை மெய்ப் பொருள் என்று கொள்ள முடியுமா? என்ற வினாவை கௌடபாதர் எழுப்பினார். தேடலுக்கு அடிப்படையாக அமையும். வினா எழுப்பும் உபாயங்கள் கிரேக்கக் கல்வியிற் சிறப்பிடம் பெற்றன. படைப்புப் பற்றியும், உலகத் தோற்றங்கள் பற்றியும் வினா எழுப்புதலும் அவற்றின் வாயிலாகக் கருத்துக்களைத் தொகுத்து அறிதலும் பண்டைய கிரேக்க மரபிற் காணப்பட்டமை போன்று பண்டைய இந்திய மரபிலும் காணப்பட்டது.

பிறப்பில்லாததும், பூரணத்துவமானதும் ஆகிய பொருளே மெய்ப் பொருள் என்பதும், அதற்கு வெளியே உண்டாக்கப்படத்தக்கதான எதுவுமில்லை என்பதும் கௌடபாதர் கருத்து.

வேதாந்தக் கல்வி மரபை முன்னெடுத்துச் சென்ற பெரும் சிந்தனையாளராக சங்கராச் சாரியார் விளங்கினார். நிறுவனங்களின் வழியாகக் கல்வியைப் பரப்பும் நடவடிக்கைகளையும் அவர் மேற் கொண்டார். காஞ்சி, பூரி, துவாரகை, சிருங்கேரி ஆகிய இடங்களில் அவர் நிறுவிய மடாலயங்கள் நெறி பரப்பும் பல்கலைக் கழகங்களாக அமைந்தன. வியாக்கியானம் செய்தல் என்ற உரை மரபு சமயக் கல்வியில் விருத்தியடையவும் சங்கராச் சாரியார் பெரும் உபகரிப்பைச் செய்தார். உபநிடதங்களுக்கு அவர் எழுதிய உரைகள் சிலாகித்துப் பேசப்படுவதுண்டு.

சமயக் கல்வியில் தோத்திரமரபு இந்திய பண்பாட்டுப் பின்புலத்தில் வளர்வதற்குரியவாறு சிவாநந்த லகரி, சௌந்தர்ய லகரி கனகதார முதலாம் நூல்களையும் அவர் இயற்றினார். உயர் கல்விச் செயற்பாட்டிற் கோட்பாடுகளை ஆக்குதல் தலையாய இடத்தைப் பெறுகின்றது; கல்வித் தொடர் அமைப்புக்கள் ஒவ்வொன்றும் கோட்பாட்டின் ஆக்கத்தினால் மேலும் வளர்ச்சியடையும். வேதாந்தக் கல்வியிற் சங்கராச்சாரியார் ஆக்கிய '' கேவலாத்துவிதம் '' என்ற கோட்பாடு முதன்மை பெற்று விளங்குகின்றது;

## சமயமும் கல்வியும் - 6

பிரமன் ஒன்று உபநிடதங்களிற் குறிப்பிடப்படும் பொருளே உண்மைப் பொருள் என்று சங்கராச்சாரியார் விளக்கினார்; அவித்தை எனப்படும் அறியாமை எத்தகைய தாக்கங்களைப் புரிகின்றது என்பது பற்றி அனைத்துச் சமயங்களும் தத்தம் கண்ணோட்டங்களில் விரிவாக விளக்கியுள்ளன. ஆனால் சங்கராச்சாரியார் அறியாமை பற்றித் தரும் விளக்கம் தனித்துவமானது. அறியாமையானது ஆன்மாவாகிய பூரணத்துவத்தைக் கூறுபடுத்தி விடுகின்றது என்று அவர் குறிப்பிடுகின்றார்.

உண்மையான அறிவு ஏற்படும் பொழுது மாயை ஆகிய பிரமை மறைந்துவிடுகின்றது. அறியாமை என்பது இல்லாதவற்றைத் தோற்றுவிப்பதும், உள்ளவற்றை மறைப்பதும் ஆகிய செயல்களைப் புரிய உதவுகின்றது. சீவன்கள் இந்த உண்மையை உணர வேண்டும். நிர்க்குணமாகிய பரப்பிரமமே மெய்யானது என்பதை அறிந்ததாகிய ஞானத்தைப் பெறவேண்டும் என்பதைச் சங்கரர் கேவலாத்துவிதம் வாயிலாக விளக்குகின்றார்; பிரமன் ஒன்றே உள் பொருள். மற்றவை யாவும் தோற்றங்கள் என்ற ஒருமை வாதம் வேதாந்தக் கல்வியிலே தொடர்ச்சியாக வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது;

மறுத்தல், நிறுவுதல் என்ற தருக்கப் பாரம்பரியங்களும் இந்துக்கல்வி மரபிலே காணப்படுகின்றன. அறிவற்ற பொருளில் இருந்து அறிவுள்ள பொருள் தோன்ற முடியாது. என்ற தருக்கத்தை முன் வைக்கும் சங்கராச்சாரியார், பிரமனே தனது சத்தியாகிய மாயையுடன் இணைந்து படைத்தல், காத்தல், அழித்தல் என்பவற்றைப் புரிவதாக நிறுவுகின்றார். சங்கராச்சாரியார் முன் மொழிந்த தருக்கம் '' சற்காரண வாதம் '' என்று கூறப்படும். அதாவது, ஒரு வினைவுக்கான காரணத்தை மட்டும் நோக்குதல் சற்காரண வாதத்தில் இடம் பெறும்;



வேதாந்த மரபானது மேலும் மேலும் ஆய்வுகளுக்கு அழைத்துசெல்லும் சிறப்பைக் கொண்டது. இந்துக் கல்வி மரபிலே காணப்பெற்ற புலமைச் சுதந்திரத்தை வேதாந்தம் தொடர்பான வெவ்வேறு சிந்தனைப்பள்ளிகள் எடுத்துக் காட்டுகின்றன. ''இராமானுச வேதாந்தம் '' என்ற பிரிவு இவ்வாறாகத் தோன்றிய சிந்தனைப் பள்ளிகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. '' விசிட்டாத்துவிதம் '' என்பது இராமானுசர் நிறுவிய வேதாந்தக் கோட்பாடாகும்.

இலட்சிய ஆசிரியர், இலட்சிய மாணவர் ஆகியோர் எவ்வாறு விளங்க வேண்டும் என்ற செயல் வடிவான ஒழுக்கங்களையும் இந்துக் கல்வி மரபு உருவாக்கியது ஆசிரியர்



பேராற்றல் உடையவராய் இருத்தல் வேண்டும் என்பதும், மாணவர் கருத்துச் சுதந்திரம் உள்ளோராய் இருக்க வேண்டும் என்பதும் இக்கல்வி மரபிலே உருவாக்கப்பட்டன. இந்த மரபு அறிவினைப் பெறும் வழி வகைகள் பற்றியும் விளக்கியது. காட்சி கருதுதல், நூல் ஆகிய மூன்றையும் நுழைவாயில்களாகக் கொண்டு அறிவைப் பெற முடியும் என்று சங்கரர் விளக்கினார்.

இராமானுசர் விளக்கிய வேதாந்தக் கருத்துக்கள் பிரமத்துக் குணங்கள் உண்டென்றும், பிரமன் உருவுடையது என்றும் விளக்கின. பரமான்மாவின் உறுப்புக்களாக சீவான்மாக்கள் விளங்குகின்றன என்ற உண்மையை அறிவதே ஞானம் என்பதை இராமானுசர் விரித்துரைத்தார்.

பகுத்தராயும் திறன் இந்துக் கல்வியில் வளர்ந்தமை மத்துமரின் ஆய்வுகளிலே புலப்படுகின்றன. பிரமன், உயிர், உலகு என்பவற்றிற்கிடையே வேறுபாடுகள் எக்காலத்திலும் உண்டு என்பதை மத்துவர் விளக்கினார். உயிர்களுக்கும், உயிர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு, சடப்பொருள்களுக்கும், சடப்பொருள்களுக்குமிடையே காணப்படும் வேறுபாடு என்றவாறு பேதங்களைக் கண்டறியும் திறன்களை மத்துவர் வளர்த்தார்.

உயிர்கள் தத்தம் தரத்திற்கேற்ப நான்கு வகையான பேறுகளை அடைகின்றன. அவை சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்பனவாகும். சாலேசம் என்பது இறைவனுக்குரிய உலகில் வாழ்தல், சாமீபம் என்பது இறைவனுக்கு அண்மையாக வாழ்தல், சாரூபம் என்பது வடிவத்தில் இறைவன் போலாதல், சாயுச்சியம் என்பது இறைவனது திருமேனியுள்ளே புகுந்து பேரானந்தம் கொள்ளுதலாகும். இவ்வாறு பேரானந்தம் கொள்ளும் பொழுது இறைவனும், உயிரும் ஒருமையாகக் கொள்ளப் படத்தக்கன அல்ல என்பதை அவர் விளக்கினார்.

இவற்றின் பின் பின்புலத்தில் இரண்டு அருவிகள் இந்துக் கல்வி மரபிலே தொடர்ச்சியாக வளர்ந்து வந்துள்ளமை புலனாகும். ஒன்று, இறைவனும் உயிரும் பிரிக்க முடியாதவை என்ற ஒருமை வாதம், மற்றையது இறைவனும் உயிரும் ஒருமையாகிக் கொள்ளத்தக்கவையன்று என்று கருதும் இருமை வாதம்.

சமய நெறியிலே தழைத்து ஓங்கிய இக் கருத்துக்குரிய ஒப்புமையைச் சமூகத்திலும் காண முடியும். இந்திய நிலமானிய அரசு முறைமையில் இரு பெரும் கருத்துக்கள் நிலவின. ஒன்று ஆட்சியில் மக்கள் பங்கு கொள்ள முடியும் என்ற கருத்து. ஆட்சி முறை மேலும் மேலும் வளர்ச்சியடைய ஆளுவோர் ஆளப்படுவோர் என்போர் ஒன்றிணைய முடியாத இரு கூறுகளாயினர். இதிலிருந்து இரண்டாவது கருத்து எழுந்தது.

அரசைப் போன்று உற்பத்தி முறைமையிலும் இத்தகைய முரண்பாடுகளைக் காணலாம். உற்பத்தியில் அனைவருக்கும் பங்கு உண்டு என்றிருந்த புராதன உற்பத்தி முறை மாற்றமடைய உற்பத்தியில் உழைப்போர் பங்கு கொள்ள முடியாத புறக்கணிப்பு நிகழ்ந்தது.

இந்து சமயம் சார்ந்த கோட்பாட்டு வடிவங்களை ஆராயும் பொழுது, சமூகப் பின்புலம் மேலும் விளக்கங்களைத் தருவதாக இருக்கின்றது. வாழ் நிலைகளில் இருந்தே சிந்தனைகள் முகிழ்த்து எழுகின்றன என்பதை இந்துக் கல்வி பற்றிய ஆய்வு மேலும் தெளிவுபடுத்துகின்றது.

— தொடரும்

# சித்தி தரும் சீரணி நாகம்மாள்



நட்டுவைத்த நாகம்மை நல்லழகி
திரிசூலி நம்மைக் காக்கும்
வட்டமதி முகமுடையாள் வளைக்கையாள்
திருக்சரத்தில் சூல மேந்தி
எட்டுமுள திக்கெல்லாம் எட்டியெட்டித்
தீமைகளை வெட்டி வீழ்த்தி
பட்டமரம் தளிர்த்திடவும் பாலைவனம்
செழித்திடவும் பாலிப் பாளே;

பத்தினியாள் பார்வையிலே பட்டுவிட்டால்
எங்களுக்குப் பக்தி வரும்
சித்திவரும் சேர்ந்தகலைச் செல்வமெலாம்
சேர்ந்துவரும் திசழும் வாழ்வு
சொத்துசுகம் தேடிவரும் சுதந்திரமாம்
வாழ்வு வரும் சோர்விலாத
சக்திவரும் முத்திவரும் தேவியருள்
பெற்று விட்டால் சுடரும் ஞானம்.


தெரிகின்ற நாகம்மை திருப்பதத்தி
லேவிழுந்து சேவித் தாலே
பொருத்தமுற வேயணைந்து பொய்கையென
வேகுளிர்ந்து பூரிப்போடு
வருத்தமெலாம் தான் தணித்து எந்தகுறை
கேட்டறிந்து வரமளிப்பாள்
அருத்தியொடும் அம்பிகையை அருள்சுரக்க
வேண்டுமென அஞ்சலிப்போம்.

வாய்மைக் கும்நீ வளத்துக் குப்நீ
வாழ்வுக் கும்நீ தாழ்வுக் கும்நீ
தாய்மைக் கும்நீ தண்மைக் கும்நீ
தகவுக் கும்நீ உயர்வுக் கும்நீ
சேய்மைக் கும்நீ அண்மைக் கும்நீ
செழிப்புக் குப்நீ சிறப்புக் கும்நீ
ஆயே நீயே எல்லாம் அல்லால்
அறியும் தரமோ தாமோதரியே;

— கவிஞர் அம்பிகைதாசன்

# அமெரிக்கா நாட்டில் தொன்மை வாய்ந்த சிவாலயம்

ஆதி அகிலத்தின் குமரி நாடு என்னும் இடத்திலேயே உயிரினங்கள் தோன்றி வளர்ந்த வேளையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக, மக்கள் பல இடங்களுக்கு பிரிந்து சென்று பற்பல குலங்களாயினர் என்று சரித்திர ஆய்வாளர்களும், மொழியியலாய்வாளர்களும், இயற்கை நூல் ஆசிரியரும் கருதுகின்றனர். (ஆதாரம்;- Prof. E. Haeckel's, 'The History Of Creation' Vol 1 Page 437) உலகமக்களின் சமயத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்த வெஸ்ரப் (Weshtropp) எனும் ஆசிரியர் எல்லாச் சமயங்களின் அடிப்படையொன்றெனவும், நாகரிக முதன்மையிலே அது தோன்றியிருக்க வேண்டுமென்றும் கூறியுள்ளார். நாகரிக முதன்மையை நோக்குமிடத்து, உலகில் தோன்றியிருக்கின்ற பழைய நாகரிகங்களுக்கெல்லாம் மிகப்பழமையுடையது சிந்துவெளி நாகரிகமெனப் பழமை ஆராய்ச்சியில் அவனிபோற்றும் தலைசிறந்த அமெரிக்கப் பேராசிரியர் பிராங்போட் (Professor Frankford) கூறியுள்ளார். மேலும், இந்திய நாகரிகம் என்பது திராவிட நாகரிகமென மேற்பெறப் பட்ட அறிஞரால் நன்கு ஆராய்ந்து காட்டப்படுகின்றது. உலகமொழிகள், உலகநாகரிகங்களுக்குள் தொடர்பு காணப்படுவது போலவே, தமிழருடைய சிவவணக்கத்திற்கும் உலக சமயங்களுக்கும் தொடர்பு காணப்படுகிறது. இச்சிவ வணக்கம் சிந்து நதியில் மாத்திரமின்றி பபிலோன், அமெரிக்கா முதலிய பல்வேறு இடங்களில் பரந்திருந்தன என்று உரோபேர்ட் வோல்ட் (Robert Volt) எனும் ஆய்வாளர் கூறியுள்ளார்.



அமெரிக்காவிலுள்ள பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சிவன்கோவில்.

-செல்வன். ஜெய் கங்கன் -
(உயர்தர கணிதப்பிரிவு மாணவன்.

அமெரிக்காவினை எடுத்து நோக்குவோமாயின், வட அமெரிக்காவில் கொலறடா (Colorado) எனும் ஆறு உள்ளது. ஒரு மைல் ஆழம்வரையில் அரித்து ஆழத்தில் ஓடிக்கொண்டிருக்கும் இவ்ஆறு 200,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாம். இதன் பக்கத்தே மேற்பாகம் தட்டையாகக் காணப்படும். 9000 அடி உயரமுள்ள குன்றின் உச்சி சிவன் ஆலயம் என அங்குள்ள மக்கள் மூதாதையர் வழியாக அறிந்து வந்தனர். ஆயினும், அவ்விடத்தை ஏறி ஆராய முடியவில்லை. 1937 ஆம் ஆண்டு விவிலிய வேதத்தின் பழைய ஏற்பாடும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

அமெரிக்கப் பழம்பொருள் ஆய்வாளர் குழு அவ்விடத்தைக் கண்டுபிடித்து நுணுக்கமாக ஆராய்ந்து தமது அறிக்கையை வெளியிட்டனர். இச்சிவன் ஆலயம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென்றும், அல்லது இதற்கு இன்னமும் மிகப் பழையதாய் இருக்கலாமென்றும் தம் கருத்தை விஞ்ஞான ரீதியில் தெளிவு படுத்தினர். இது பல நாட்டுப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்தன. அவற்றின் சில இங்கிலாந்துப் பத்திரிகைகளான 'கவல் கேட்டும் (Cavalcade - Dec. 18. 1937), 'நியுஸ் ரீவியு'வும் (News Review - Sept. 23, 1637). இலங்கைப் பத்திரிகையான 'டைம்ஸ் ஒவ் சிலோன் (Times Of Ceylon- Sunday Illustrated - June 17. 1937) என்பன ஆகும். (பல நாட்டு ஆங்கிலப் பத்திரிகைத் துணுக்குகள் உள்ளனவாயினும் சுருக்கம் காரணமாக சில பிரசுரமாக்கப்பட்டுள்ளது.)

மேற்பெறப்பட்ட ஆய்விலிருந்து வட அமெரிக்காவில் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் சிவன் ஆலயமும் சிவவழிபாடும் இருந்தன என்பது தெளிவு. சமன்லால் எழுதிய இந்து அமெரிக்கா (Hindu America - Samanlal) எனும் நூலில் அமெரிக்காவின் பல பாகங்களிலும் இன்னும் சிவலிங்க வழிபாடு உண்டு என்பதை ஆய்வு பூர்வமாக நன்கு விளக்கியுள்ளார்.

என்றுமுள்ள சிவனை என்றுமுள்ள ஆன்மா சென்றடைந்து இன்புறுவதற்கான வழியும் என்றுமுள்ளது: அவ்வழியே - சிவமயம் - சைவ சமயம் ஆதலால் என்றுமுள்ள சைவ சமயத்தை இன்றுள்ள இப்புவியில் தோன்றிய ஆன்மாக்கள் அறிந்தமைக்கும், அதை அபிவிருத்தி செய்தமைக்கும் ஒருவாறு கால எல்லை கூறுதல் என்றால் மனிதர் தோன்றி கடவுளை உணரத் தலைப்பட்ட கணமே சைவசமயத்தின் இவ்வுலக ஆரம்பம் என்று கூறலாம்.


தரம் மிக்க

அழகிய அச்சு வேலைகள்
எதுவாக இருந்தாலும்

நீங்கள் நாட வேண்டிய இடம்:-

சாந்தி அச்சகம்

நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம்

தொலைபேசி 23002

கிஷ்கிந்தையில் வானர அரசனாக முடிசூட்டப் பெற்று ஆட்சி செய்து வந்தான் வாலி. தேவேந்திர குமாரனான வாலி மகா பலசாலி இராவணனை விட ஆயிரம் மடங்கு வலிமை கொண்ட வச்சிர தேகத்தை உடையவன். தன்னை எதிர்த்துப் போரிடுபவர்களுடைய உடல் வலிமை, சிறிது சிறிதாகத் தனக்கு வந்துவிட வேண்டும் என்பது அவன் பெற்ற அபூர்வமான வரங்களில் ஒன்று. ஆகையால் வாலியை எதிர்த்துப் போரிட பூவுலகில் எவருமே இல்லாதிருந்தனர்.

# பிறவிகள் தோறும்...

வாலியின் தம்பி சுக்ரீவன். சுக்ரீவனுக்கும், வாலிக்குமிடையே உண்டான விரோதம் காரணமாக, வாலிக்குப் பயந்த சுக்ரீவன் வனத்திலும், மலைச்சாரல்களிலும், அங்குமிங்குமாக ஒழித்துத் திரிந்து வாழ்ந்து வந்தான். சுக்ரீவனுடைய மந்திரியாகிய அனுமனும், வேறுசில வானரர்களும் அவனுடன் பிரிந்து வந்து விட்டனர்.

சீதையைத் தேடிக் காடுகளிலும், மலைகளிலும் அலைந்து கொண்டிருந்த இராமனும், இலக்குமணனும் கிஷ்கிந்தையை அடைந்தனர். சுக்ரீவனும், இராமனும் நண்பர்களாகி ஒருவருக்கொருவர் உதவத் தீர்மானித்தார்கள். சுக்ரீவனுடைய துக்கத்தைப் போக்க எண்ணிய இராமன் "உன்னுடைய பகைவனை வாலியைக் கொன்று, உனது இராச்சியத்தையும், மனைவியையும் மீட்டுத் தருவேன்" என்று அக்கினி சாட்சியாகச் சத்தியம் செய்து கொடுத்தான். கைமாறாக் தனது வானரப் படையை நாலு திசைகளுக்கும் அனுப்பிச் சீதையைத்தேட உதவுவதாகச் சுக்ரீவன் வாக்களித்தான்.

சுக்ரீவனுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வாலியைக் கொல்லத் தீர்மானித்தான் இராமன். வாலியும், இராமனும் முன்பு ஒருவரை ஒருவர் கண்டு அறியாதவர்கள். அவர்கள் இருவருக்குமிடையில் எதுவிதமான கோபமோ, பகையோ இருந்ததில்லை. அப்படியிருக்கக் காரணம் எதுவுமின்றி வாலியை எப்படிக் கொல்லலாம் என எண்ணி இராமன் கவலையடைந்தான். மேலும் வாலி பெற்றிருந்த அபூர்வ வரத்தின் தகமையையும், சுக்ரீவன் மூலம் அறிந்திருந்தால், சுக்ரீவனும், வாலியும் போர் செய்யும் பொழுது மறைந்திருந்து அம்பெய்து வாலியைக் கொல்லத் தீர்மானித்தான் இராமன்.

சுக்ரீவனுக்கு, இராமன் இருந்... யப் போருக்கு அழைத்தானவு க... மலைகளிலும் பயந்து மறைந்த சுக்ரீ... கிறுனே என்று ஆச்சரிய... வாலி, ஆரவாரம் செய்தபடி போருப்பட்...

வாலிக்குப், சுக்ரீவனுக்கில் மிக... நடந்து கொண்டிருந்தது ... வலி... யின் பலம் அதிகரிக்கச் சுக்ரீவம் கு... இனியும் தாமதம் செய்தவன் இ... எண்ணிய இராமன், வில்லை, வாலி... பாணத்தை விட்டான். ... வரமா... டைய பாணம் துளைத்து... அம்... குந்து இரத்தம் பீரிட்டுப் ...தனையுட... மரம்போல வாலி நிலத்தில் ...ான்.



தன் மார்பைத் துளைத்தம் எ... பதை அறிய வாலி சுற்றும் பார்த்... அடியில் 'இராம இலச்சினை றிக்கப்... மி வும் ஆச்சரியமும், கோகாண...

ன இருந்ததால் வாலியை வலி
வளவு காலமும் காடுகளிலும்,
ந சுக்ரீவன் போருக்கு அழைக்
வாலி, தோள்களைத் தட்டி
றப்பட்டு வந்தான்.

யில் மிகப் பயங்கரமான போர்
வலிமையால், வர வர வாலி
லம் குறையத் தொடங்கியது
வன் இறந்து விடுவான் என
, வாலிக்கு இலக்கு வைத்துப்
வரமான மார்பை இராமனு
அம்பு துளைத்த இடத்திலி
தனையுடன் அடியற்ற பாரிய
ான்.



ம் எங்கிருந்து வந்தது, என்
பார்த்து விட்டு, பாணத்தின்
றிக்கப்பட்டிருப்பது கண்டு,
காண்டான். அந்தச் சமயம்,

இராமனும், இலக்குமணனும் மெதுவாக வாலியின் பக்கத்தில் வந்தார்கள்.

இராமனைக் கண்ட வாலி ''ஏ, தசரத குமாரா, உத்தம குலத்தில் பிறந்து பெரும் புகழ் பெற்ற சத்திய வந்தனன நீயா இந்த இழி தொழிலைச் செய்தாய்? நீ அரச பதவிக்கு ஏற்றவனல்ல. உன்னைப் பூமாதேவி ஏற்றுக்கொள்ள மாட்டாள். முறை தவறி நீ அம்பு எய்த பெரும் பழிக்கு ஏற்ற தண்டனையை அனுபவிப்பாய்'' என்று கூறி உயிர் துறந்தான்.

விரோதம் எதுவும் இல்லாமல், மறைந்திருந்து வாலியைக் கொன்ற துக்கத்தை தாளாத இராமன் மௌனமாக நின்றான். ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் அம்சம் பெற்று, மானுட உருவுடன் மண்ணுலகில் பிறந்தாலும், அவதார இரகசியத்தை அறிந்திராதபடியினால், சாதாரண மனிதர் போன்று கவலை, துன்பம் போன்ற பூவுலக நியதிகளிலிருந்து இராமனால் தவற முடியவில்லை.

ரகுராமனாக, தசரதராமனாக, கோசலராமனாக, சீதாராமனாக' இறுதியில் ராஜராமனாக வாழ்ந்து, துன்பங்களைப் பொறுமையுடன் சகித்து ஏக பத்தினி விரத தத்துவத்தை மானுடருக்கு உணர்த்தவே ஸ்ரீ நாராயண மூர்த்தி அவதாரம் செய்தார்.

# பிராரத்துவ வினை

இராமன் மிதிலையில் ஜானகியை மணந்து, பின்பு வனத்துக்குச் சென்று, இராவணயுத்தமும், வரமும் முடிந்தபின் அயோத்தியை அடைந்து பதினொரு ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி புரிந்த பின்னர், காலதேவனின் அறிவிப்பின்படி வைகுந்தம் சென்றதாக இராமாயணம் கூறுகிறது.

அழகு அருணாசலம்

பல ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் ஸ்ரீ நாராயண மூர்த்தி பூமியின் பாரம் தீர்க்க வேண்டி, மானுட உருவுடன் கிருஷ்ணனாக அவதரித்தார். அவதார இரகசியம் அறிந்த கிருஷ்ணன், எண்ணிறந்த லீலைகளைச் செய்தான். இடைச்சேரியில் அவன் செய்த லீலைகள் கவலையோ துக்கமோ இன்றி விளையாட்டாக நடத்தியவையே. பாரதப்போரின் முன்பும், பின்பும் தான் ஆயுதம் எதுவும் எடுக்காமல், தருணத்துக்கேற்பப் பிறரைக் கொண்டே துஷ்டரை

(26 ஆம் பக்கத் தொடர்ச்சி)

# நாளை முதல்

கேற்றைத் திறந்து உள்ளுக்குள் காலடி எடுத்து வைத்ததும், ''மாமா வாறார்' என்று ஜனகன் தாயிடம் சொல்வது சுந்தரத்திற்குக் கேட்டது.

நிமிர்ந்து பார்த்தார். தங்கை சுமதி வாசலுக்கு வந்து ''வாங்கோண்ணா'' என்றாள், கொண்டுவந்த பார்சலை தங்கையிடம் கொடுத்துவிட்டு ''எங்கே அவர்'' என்று கேட்டார்.


''பழைய குருடி கதவைத் திறவடி என்று, பழையபடி துடங்கிவிட்டாரண்ணா'' என்று கவலையுடன் சொன்னாள்.

கதிரையில் அமர்ந்த சுந்தரம் சிறிது நேரம் நிலத்தைப் பார்த்தபடி யோசித்துக் கொண்டிருந்தார். பின்பு ''அப்ப நான் கேள்விப்பட்டது உண்மைதான்'' என்றார் பெருமூச்சுடன்.

''என்னண்ணா கேள்விப்பட்டியள்''?

''குடிச்சுப் போட்டு றோட்டில விழுந்து கிடந்தாராம். மூன்று நாள் குடிக்காமல் இருந்ததை, நீ அவர் குடிப்பதையே விட்டு விட்டார் என்றாய். நான் 'நம்பிவிட்டேன்', என்றார்.

# குடிக்க மாட்டேன்



இப்ப கொஞ்ச நாளாகசிப்புக் குடிக்கிறார். முன்பு போல சாப்பிடுவதும் இல்லை. நீங்க கொஞ்சம் அட்வைஸ் பண்ணுங்கோ'' என்றாள் வேதனையுடன்.

**வில்வம் பசுபதி**

''நான் என்னத்தைச் சொல்லுவது, அவர் என்ன சிறு குழந்தையா, நீதான் திருத்தவேணும். உன்னுடைய கெட்டித்தனத்தில்தான் தங்கியிருக்கு. உஷாவுக்கு நல்ல சம்பந்தம் வந்திருக்கு. நல்ல பொருத்தம். நல்ல இடம். அது விஷயமாய்த்தான் வந்தனான். புரோக்கர் வந்து ஏதாவது சொன்னாரா?'' என்று கேட்டார்.

அந்த நேரம் கேற்றைத் திறந்து கணேசன் வந்தான். சுந்தரத்தைக் கண்டதும் தலையை ஆட்டிவிட்டு உள்ளே போனான். பாத்றூமுக்குள் போய் முகங் கழுவி, பவுடர் போட்டு ஒரு கராம்பை வாயில் போட்டுச் சப்பிய வண்ணம் சுந்தரத்திடம் வந்தான். தான் குடித்திருப்பது சுந்தரத்திற்

குத் தெரிந்துவிடக்கூடாது என்று மிகக் கவனமாக இருந்தான். சுந்தரத்திடம் இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு வெளியே போனான்.

அவன் போனதும், "பார்த்தியா சுமதி, தான் குடித்திருப்பதை மறைக்க எவ்வளவு அக்கறை எடுத்திருக்கிறார். அந்தப் பயமாவது இருக்கட்டும். எல்லாம் உன்னில் தங்கியிருக்கு நீ தான் திருத்தணும்" என்று சொல்லி விட்டுக் கிளம்பினார்.

படித் திருத்துவது? என்னசெய்வது. அவள் மனம் பேதலித்துத் தவித்தது: "அம்மா துர்க்கையே எனக்கொரு வழிகாட்டு" என்று அவள் உதடுகள் திரும்பத் திரும்ப உச்சரித்தன. எத்தனை தடவை அப்படி உச்சரித்திருப்பாளோ தெரியவில்லை. அந்தச் சொற்களுடனேயே அவள் உறங்கிவிட்டாள்.

அடுத்த நாள் காலையில் எழுந்தபோது, அவள் மனப்பாரம் குறைந்திருந்தது. மனம் தெளிவுபெற்று இருந்தது. "என்

இறை வழிபாட்டின் மூலமே மன அமைதியைப் பெறலாம். துர்க்கையம்மனை ஏழு செவ்வாய்க் கிழமை தொடர்ந்து போய் வணங்கு; இயலுமானால் புருசனையும் அழைத்துப் போ" என்று சொன்னவர் விபூதியும் கொடுத்தார்.

அவர் சென்றதும் சுமதி சிந்தனை வயப்பட்டாள். கணவனின் குடிப்பழக்கத்தை எப்படி நிறுத்துவது என்ற எண்ணம் மேலோங்கியது. "அம்மா, தாயே! எனக்கொரு வழிகாட்டம்மா" என்று மனதார அவள் தினம் வணங்கும் அம்மனை வேண்டினாள். கணவன் எது செய்தாலும், எது சொன்னாலும், பொறுத்து, அவன் மீது உயிரையே வைத்திருக்கும் அவளுக்கு இந்தப் பிரச்சனை பெரும் சவாலாக அமைந்தது.

அன்று முழுவதும் அதே சிந்தனையாக இருந்தது. இரவு அவளுக்கு நித்திரையே வரவில்லை. கொழும்பில் இருக்கும் மகள் உஷாவின் நினைவு வந்தது. அவளுக்கு ஒரு நல்ல வாழ்வு அமைய வேணும். தினமும் குடியே தஞ்சம் எனக்கிடக்கும் கணவன் பொறுப்பின்றி இருக்கிறாரே எனக் கலங்கினாள்.

"உன்னால் தான் முடியும், நீ தான் திருத்த வேணும்" என்று அண்ணை சொன்னது மீண்டும் ஞாபகத்திற்கு வந்தது. எப்

பிரச்சினைகளை அம்மனிடம் சமர்ப்பித்து விட்டேன். அவள் தீர்த்து வைப்பாள்', என்ற உறுதியான நம்பிக்கை ஏற்பட்டதும், அவள் மனம் அமைதியடைந்தது.

கிணற்றடியில் பாத்திரங்களைத் துலக்கும்போது, வைரவர் கோவிலில் 'சாமி அம்மா' என்று அழைக்கப்படும் பெண்மணி சாத்திரம் சொல்வதாகவும், பிரச்சினைகளுக்கு பரிகாரம் சொல்வதாகவும் முன்பு கேள்விப்பட்டது நினைவிற்கு வந்தது.

கணவன் வேலைக்குப் போனபின்பு பிள்ளையைப் பாடசாலையில் கொண்டுபோய் விட்டுவிட்டு சாமி அம்மாவிடம் போக ஆயத்தம் செய்தாள். குளித்துவிட்டு வெற்றிலை, தேங்காய், பழம், பாக்கு எல்லாம் தட்டத்தில் வைத்து சாமி அம்மாவிடம் போனாள்.

அவள் போனபோது அங்கு பெரும் கூட்டமாக இருந்தது. பொறுமையுடன் காத்து இருந்தாள். எல்லோரும் போன

பின்பு சாமி அம்மாவிடம் போய் வணங்கி நின்றாள். சுமதியின் நெற்றியில் விபூதி பூசி விட்டு ''புருஷனைப் பற்றிக் கவலைப்படுகிறாய். எல்லாம் சரிவரும்'' என்றார்.

''தினமும் குடிக்கிறார். அவரைத் திருத்த வழி சொல்லுங்கள்'' என்று பணிவாகக் கேட்டாள்.

சாமி அம்மா சுமதியை ஒரு கணம் உற்றுப் பார்த்தா. சுமதியின் நெஞ்சில் குடிகொண்டுள்ள துன்பச் சுமையை அவரால் உணரமுடிந்தது

''இறை வழிபாட்டின் மூலமே மன அமைதியைப் பெறலாம். துர்க்கையம்மனை ஏழு செவ்வாய்க் கிழமை தொடர்ந்து போய் வணங்கு; இயலுமானால் புருசனையும் அழைத்துப் போ'' என்று சொன்னவர் விபூதியும் கொடுத்தார்.

வீட்டிற்கு வந்த சுமதி கணவனுக்கு விபூதியைக் கொடுத்து அவனை எப்படியும் நெற்றியில் பூசப்பண்ண வேண்டும் என எண்ணினாள். இந்த ஏழு கிழமையும் குடியை நிறுத்தும்படியும் கேட்க எண்ணினாள். அவனை எப்படிக் கேட்பது? எப்படித் தன் வழிக்குக் கொண்டுவருவது? என்பது பற்றியே சிந்தித்தாள்.

அன்று இரவு சாப்பாட்டிற்கு முன் கணேசன் சைக்கிளைத் திருத்திக்கொண்டிருந்தான். சுமதி அந்த நேரம்போய் சாமி அம்மா கொடுத்த விபூதியைக் கொடுத்து ''பூசுங்கோ'' என்றாள்.

கணேசன் அதை வினோதமாகப் பார்த்தான். பின்பு ''என்னப்பா இது'' என்றான்.

''சாமி அம்மா விபூதி தந்தவ பூசுங்கோ''

''அதென்னப்பா சாமியிலும் அம்மா, அப்பா இருக்கா'' என்றான் சிரித்தபடி, பின்பு ''நீயே பூசு. நான் பூசினாலென்ன நீ பூசினாலென்ன'' என்றான்.

அவனுடைய கிரிப்பில் இருந்து அவன் குடித்திருக்கிறான் என்று தெரிந்தது. ஒன்றும் பேசாது விபூதியைக் கொண்டுபோய் கணவனின் தலையணைக்குக்கீழ் வைத்தாள்.

அவள் மனம் நிலைகொள்ளாது தவித்தது. கணவனை எப்படியும் ஏழுகிழமைகளுக்குக் குடியாமல் இருக்கப்பண்ண வேண்டும்என்று தீர்மானித்தாள்.

''எனக்கொரு உதவி செய்ய வேண்டும்'' என்று மெல்ல ஆரம்பித்தாள்.

''உதவியா? என்னப்பா செய்ய வேண்டும்.? பாத்றூம் பைப் லீக் பண்ணுதா? திருத்தணுமா'''' என்றான்.

நீங்க ஏழு கிழமைகளுக்குக் குடிக்கக் கூடாது. சாராயமோ வேறு எதுவுமோ குடிக்கக் கூடாது'' என்றாள்.

அதிர்ந்து போனான் கணேசன். தன்னால் முடியாததை அல்லவா செய்யச் சொல்லிக் கேட்கிறாள். ''ஏழு நாளைக்கு குடிக்காமல் இருக்க முடியாது. வேறு உதவி கேள்! செய்யுறன்'' என்றான்.

''எனக்காக நீங்க கட்டாயம் இதைச் செய்தே ஆகவேண்டும். நினைத்தால் உங்களால் முடியும்''என்று வற்புறுத்தினாள்.

என்னால் செய்ய முடியாததை வற்புறுத்தாதை; நான் என்ன குடிச்சுப்போட்டு உன்னோடை சண்டைபிடிக்கிறனோ? அல்லது அயலவரோடு சோலிக்குப் போறனோ ?''என்றான்.

சுமதி இப்போது பொறுமை இழக்கத் தொடங்கினாள் ''அப்ப உங்களால் சராயத்தைத் தொடமால் இருக்க முடியாது. அப்படித்தானே? அதுவும் ஏழு கிழமைக்கு'' என்று கேட்டாள்.

அதுதான் சொல்லிப் போட்டேனே'

எனக்காக? உங்கள் பிள்ளைகளுக்காக, சாராயத்தைத் தொடாமல் இருக்க முடியாதா''?

எத்தனை தடவையப்பா சொல்லுறது? நான் அப்படிப் பழகிவிட்டன். முடியாது." என்றான் சினத்துடன்.

சுமதி பொறுமை இழக்காது நிதானமாகச் சொன்னாள் "நீங்கள் சாராயத்தைத் தொடும்வரை நான் சோற்றைத் தொட மாட்டேன். நாளை முதல் நான் சோறு சாப்பிடப் போவதில்லை. உங்களால் சாராயத்தை தொடாமல் இருக்க முடியாது, ஆனால் என்னால் சோற்றைத் தொடாமல் இருக்கமுடியும்." இப்படிச் சொன்னவள் அந்த இடத்தில் நிற்காது போனாள்.

மனைவியின் சொற்களைக் கேட்டு அதிர்ந்து போய் சிலையாய் நின்றான் கணேசன், சுமதியின் குணம் அவனுக்கு நன்கு தெரியும். சொன்னதை செய்து காட்டுவாள்,

சுமதியின் பின்னே போனான். "பிடிவாதம் பிடிக்காதே! அது பெண்களுக்குக் கூடாது" என்றான்.

"பிடிவாதம் கூடாதுதான். ஆனால் ஒரு நன்மைக்காக, செய்யும்போது, அதில் தவறில்லை." என்றாள்.

"பிடிவாதமும், எதிர்வாதமும் பெண்களுக்குக் கூடாதென்று வாரியார் சொல்லியிருக்கிறார் தெரியுமா? என்றான்.

"குடி குடியைக் கெடுக்கும், என்றும் சொல்லியிருக்கிறாரே" என்றாள்.

"ஏட்டிக்குப் போட்டியா வாதாடுகிறாயா" என்று கேட்டான் சினத்துடன்.

சுமதிக்கு அழுகையே வந்துவிடும் போல் இருந்தது.

"இதோபாருங்கோ! கணவன் தவறான வழியில் செல்லும்போது எடுத்துக் காட்டுவது மனைவியின் கடமையும் உரிமையும் திருத்த முயற்சிப்பதும் அவள் கடமை; என்னால் உங்களை ஏச முடியுமா? கண்டிக்க முடியுமா? நான் என்னையே வருத்தி, அழிந்து போவதைத்தவிர வேறு வழியென்ன?" என்று சொல்லும் போது மேலும் பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைக்க, ஓடிப்போய் கட்டிலில் படுத்து விக்கி, விக்கி அழுதாள்.

சுமதியின் சொற்களும், அவள் விக்கி, விக்கி அழுத விதமும் அவன் உள்ளத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. முன்விறாந்தையில் வந்து அமர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தான். சுமதியின் விசும்பல் ஒலி அவன் காதுகளில்விழ, மெல்ல எழுந்து முற்றத்தில் உலாவினான்.

ஒருசில நிமிடங்களில், சுமதி எழுந்து முகம் கழுவி சாப்பாட்டு மேசையில் சாப்பாடு எடுத்து வைத்துவிட்டு கணேசனை சாப்பிட அழைத்தாள். எதுவுமே நடவாதது போல் இயல்பாக அவள் தன் கடமைகளைச் செய்வதைக் கண்டு. அவள் முகத்தைப் பார்த்தான். அவன் பார்வையைத் தவிர்த்து உணவு பரிமாறிய அவளின் கையைப் பிடித்தான். சுமதி நிமிர்ந்து பார்த்தாள்.

"நீ கேட்டபடி நான் ஏழுகிழமைக்குக் குடிக்கவில்லை. இது சத்தியம். நீ சோறுசாப்பிட வேண்டும்" என்றான்.

தன் மீது வைத்திருக்கும் பாசத்தினால் இந்த முடிவைக் கணவன் எடுத்திருப்பதை உணர்ந்தபோது அவள் உள்ளம் உருகியது, தனது சொற்களால் கணவன் மனதைப் புண்படுத்தி விட்டோமோ என்று எண்ணிய போது அவள் கண்கள் கலங்கின.

அடுத்தநாள் காலை வழக்கத்திற்குமாறாக கணேசன் தாமதமாகவே நித்திரையை விட்டு எழுந்தான். "ஆபீசுக்கு லேட்டாகப் போகுது. குளிச்சிட்டு வாங்க" என்று சொன்ன சுமதியிடம் "இன்னைக்கு லீவுபோடப்போறன் என்றான். தொடர்ந்து" இன்னைக்குப் பார்ட்டி இருக்குது ஆபீசிலை போனா குடிக்கவேண்டி வரும். நான் லீவுபோடுறன் என்றான்.

சுமதிக்குப் பெரும் மகிழ்ச்சி. சத்தியத்தைக் காப்பாற்றுவான் என திடமாக நம்பினுள்.

மூன்று நாட்கள் அமைதியாகச் சென்றன. நான்காம் நாள் இரவு கணேசனுல் நித்திரை கொள்ள முடியவில்லை. ஒரு ட்ராம் குடித்தால் நித்திரைவரும் என எண்ணினுன். நேரத்தைப் பார்த்தான். பதினெரு மணி. மெல்ல எழுந்து, சேர்ட்டை மாட்டி, வெளியே வந்து கேற்றைத் திறக்க, கேற்றில் கை வைத்தான். அப்போது அவன் கைமேல் இன்னெரு கை பட்டது. திரும்பிப் பார்த்தான். சுமதி பின்னுக்கு நின்ருள்.

''நித்திரை வரேல்லை சுமதி வெளியிலை உலாத்தப் போறன்'' என்ருன் தயங்கியவாறு.

''முற்றத்திலை உலாத்தலாமே! தெருவிலை என்ன உலாத்திறது?''

கணேசன் நின்று யோசித்தான்: பின்பு ''சுமதி, கோவிக்காதே, ஒரு சொட்டுக் குடித்தால் நித்திரை வரும். இஞ்சை பார் உடல் சோருது, கை நடுங்குது'' பரிதாபமாய்க் கெஞ்சினுன்.

''அப்படி ஒண்ணுமே இல்லைங்க, எல்லாம் வெறும் மனப்பிராந்தி, வாங்க'' என்று அழைத்தாள்.

வீட்டில் இருந்து சுமதி கொஞ்சம் பிரண்டி வாங்கினுள். அதில் மிச்சம் இருக்கும் என்ற நப்பாசையுடன் போனுன். சுமதி மைலோ கரைத்து வற்புறுத்திக் கொடுத்தாள். குடித்துவிட்டு கொஞ்ச நேரத்தில் நித்திரையாகிவிட்டான்.

கணவன் படும் அவஸ்தையைக் கண்டு பெரும் வேதனையடைந்த சுமதிக்கு அன்று உறக்கமே வரவில்லை.

அடுத்த நாள் காலை எழுந்ததுமே ஆபீஸ் விடயமாகப் போகவேண்டும் என்று சொன்ன கணேசன், ஏழு மணிக்கே புறப்பட்டுப் போனுன்.

சுமதிக்கு கவலையாகவும், பயமாகவும் இருந்தது. தனக்கு தெரியாமல் சாராயம் குடிப்பதற்கு திட்டம் போடுகிருன் என எண்ணினுள்.

பஸ் நிலையத்திற்குப் போகும்போது கணேசனுக்கு முதல் நாள் இரவுச் சம்பவம் அடிக்கடி மனதில் தோன்றியது. பஸ்ஸில் ஏறியும் அதே நினைவாகவே இருந்தான். பஸ் போய்க்கொண்டிருந்தபோது, அவனுக்கு முன்வரிசையில் இருந்த ஒருவர் தன் பெயரைக் குறிப்பிட்டுப் பேசியதையும் அவதானித்தான்.

''நல்ல பொருத்தம், பெண்ணும் நல்ல

**''சுமதி, நீ ஏழு கிழமைகளுக்கு குடிக்க வேணும் என்று கேட்டாய், இனி ஏழு ஜென்மத்திற்கே குடிக்க மாட்டேன். இதுசத்தியம்'' என்று சொன்னவன் '' எங்கே அந்தவிபூதி, சாமி அம்மா தந்தது ''என்று கேட்டான்.**

''பிராந்தியா? மிச்சம் இருக்கா?'' என்று அப்பாவித்தனமாகக் கேட்டபடி பின்தொடர்ந்தான்.

சில வாரங்களுக்கு முன் உடம்பில் ஏற்பட்ட நோவுக்கு பூசுவதற்காக அடுத்த

பெண். ஆனல் தகப்பன் சரியான தண்ணிச் சாமி. கணேசன்னு பெயராம். கச்சேரியில் வேலை செய்கிருனும். நமக்குச் சரிப்பட்டு வராது. குடிகாரக் குடும்பத்திலை சம்பந்தம் வேண்டாம்'' என்ருர் அவர்.

கணேசனுக்குத் தலையில் சம்மட்டியால் தாக்கியதுபோல் இருந்தது. ''தண்ணிச்சாமியாம்'' தனக்கு ஊரிலே இப்படி ஒரு பெயரா? தன் குடியாலே தன் மகளுக்கு வரும் கல்யாணமே நிலைகொள்ளாது தவித்தது. ஒரு தீர்மானத்திற்கு வந்தவன் போல், திடீரென எழுந்து மணியை அடித்தான். பஸ் நின்றதும் இறங்கி வீடுநோக்கி நடந்தான்.

ஆபீஸ் விடயமாகப் புறப்பட்ட கணவன் வீடு திரும்புவதைக் கண்ட சுமதி ஆச்சரியத்துடன் அவனை நோக்கினாள். ''பஸ் கிடைக்கேல்லையா'' என்று கேட்டாள்.

அதற்குப்பதில் கூறாது ''உஷாவுக்கு கல்யாணம் பேசப்படுதா'' என்று கேட்டான்.

சுமதிக்கு ஒன்றும் புரியவில்லை. ஏன் இந்தத் திடீர் கேள்வி? என்ன நடந்தது? யோசித்தவாறு அவனையே பார்த்தாள். பின்பு ''அண்ணா தான் பேசினார் நல்ல இடமாம் நல்ல பொருத்தமாம் நாளைக்கு முடிவு சொல்லுவினம்'' என்றாள்.

கணேசன் ஒன்றும் பேசாது கதிரையில் அமர்ந்தான். தன் மகளின் கல்யாண விஷயம் கூட பஸ்ஸில் யாரோ கதைத்துத் தான் தெரிய வேண்டியுள்ளது என எண்ணி கவலைப்பட்டான். பிழை தன்னுடையது. வீட்டிற்கு தினமும் நிதானம் இன்றி வந்தால், பாவம் சுமதிதான் என்ன செய்வாள் அவன் நிதானமாக சிந்தித்தான். பின்பு ''சுமதி, நீ ஏழு கிழமைகளுக்கு குடிக்க வேணும் என்று கேட்டாய், இனி ஏழு ஜென்மத்திற்கே குடிக்க மாட்டேன். இது சத்தியம்'' என்று சொன்னவன் ''எங்கே அந்த வீபூதி, சாமி அம்மா தந்தது'' என்று கேட்டான். சுமதி ஓடிப்போய் தலையணைக்கு கீழ் இருந்து எடுத்து வந்து கொடுத்தாள். அதைப் பயபக்தியுடன் வாங்கிப் பூசியவன் நாளைக்கு நானும் வாறன் துர்க்கை அம்மன் கோவிலுக்கு'' என்றான்.

சுமதிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை. இப்படி ஒரு மாபெரும் மாற்றம் எப்படி நிகழ்ந்தது எல்லாம் அம்மனின் அருள் என எண்ணிப் பூரித்தாள்.

துர்க்கை அம்மன் கோவிலின் உள் வீதியைச் சுற்றி வலம் வந்த கணேசனையும், சுமதியையும் கண்ட சுந்தரம் மகிழ்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தார். நெற்றியில் வீபூதி, சந்தனம் பொட்டுடன் காட்சியளித்தான் சுந்தரம். இது எப்படி நிகழ்ந்தது என்ற வியப்புடன் அருகில் நின்ற கல்யாண புரோக்கருக்கும் மாப்பிள்ளையின் தந்தைக்கும் கணேசனை அறிமுகப்படுத்தினார்.

''குடிகாரன், தண்ணிச்சாமி, என்றெல்லாம் சொன்னார்களே, ஒரு கல்யாணத்தைக் குழப்ப என்னவெல்லாம் சொல்லுவார்கள் என எண்ணிய மாப்பிள்ளையின் தந்தை ''உங்களைப் பார்த்த உடனேயே உங்க பெண்தான் என் மருமகள்'' என்று தீர்மானித்து விட்டேன். இன்னொரு நாள் வைத்து விடலாம்'' என்றார்.

அந்த நேரம் அம்மனுக்குப் பூஜை ஆரம்பமாகியது. கோவில் மணி ஒலித்தது. ''ஆலய மணியின் ஓசையே, அம்பாளின் ஆசீர்வாதம்'' என்றார் சுந்தரம்.

★



# கீதையின் பொருள்

நண்பர் ஒருவர் மகாத்மாவிடம் சென்று கீதையின் உட்பொருளை விளக்கும்படி கேட்டார். அதற்கு காந்திஜீ,

"இங்கேவந்து குவியும் செங்கற்களை அன்றுடம் எண்ணிக் குறித்து வையுங்கள்" என்ருர்,



நண்பரும் சில நாட்கள் வரை அவ்வேலையைச் செய்து வந்தார். ஒரு நாள் சலிப்புடன் தம்முடன் இருந்தவரைப் பார்த்து,

"இது கூலியாட்கள் செய்யும்வேலை, எனக்கு இது ஏற்புடையது அல்ல, நான் வந்தது கீதையின் கருத்தைத் தெரிந்து கொள்ள, கற்களை எண்ணிக் காலத்தை வீணுக்க அல்ல," என்ருர். இது காந்திஜீயின் காதில் விழுந்தது,

"இன்னும் நீங்கள் கீதையின் உட்பொருளை விளங்கிக் கொள்ளவில்லை? தன்னலம் இன்றி ஒருவன் தன்பணியைச் செய்வதே கீதையின் உட்பொருள்! என்ருர்.

—உஷா—

## பிறவிகள்...

அழித்துச் சிஷ்டருக்கு அருள் புரியும் சக்தியைக் கொண்டிருந்தான இடைச்சேரியில் பிறந்து, கோபாலனுக வாசஞ் செய்து வளர்ந்து, பாரதப்போரில் பார்த்தனுக்குத் தேரோட்டிக், கீதோபதேசஞ் செய்து துரியோதனுதியரையும், பதினெட்டு அக்ரோணி சேனைகளையும் அழித்தான். இறுதியில் தர்மபுத்திரருக்கு இராச்சியத்தைப் பெற்றுக் கொடுத்தான்.

துவாரகைக்குச் சென்று முப்பத்தாறு ஆண்டுகள் ஆட்சி செய்தான். ஒரு நாள் தான் அவதாரம் எடுத்த நோக்கத்தையும், இனி நடக்கப்போவதையும் நினைக்கத் தொடங்கினன்.

நான் வைகுந்தம் போனதும் துவாபரயுகம் முடிந்து கலியுகம் பிறக்கும். கலியுகத்தில் இந்த யாதவர்கள் தர்மங்களை மறந்து, எல்லோருக்கும் இடைஞ்சலாக இருப்பார்கள். ஆகவே நான் போகுமுன் இவர்கள் இறக்க வேண்டும். அவர்களுக்குள் அவர்கள் சண்டை போட்டுக் கொள்ளும் நிலையை உண்டாக்க வேண்டும். அது அவர்களை அழித்து விடும். இதைச் சாதிக்க அவர்களுக்குப் பிராமண சாபம் ஏற்படுத்துவது தான் வழி."

கிருஷ்ணனும் அவனுடைய அண்ணன் பலராமனும் ஒரு யாகம் செய்தனர். அதற்கு ரிஷிகளும், முனிவர்களும் வந்திருந்தனர். அடக்கமும், ஒழுக்கமும் இழந்த யாதவர்கள் முனிவர்களைப் பரிகசித்தனர். கோபங் கொண்ட முனிவர்களின் சாபத்தால் யாதவகுலத்தவர், இரண்டு கட்சியினராகப் பிரிந்து சண்டையிட்டு, அனைவரும் இறந்தொழிந்தனர். கிருஷ்ணன் ஒருவனே எஞ்சியிருந்தான்.

நடந்து முடிந்தவையெல்லாவற்றையும் எண்ணிய கிருஷ்ணன், தானும் பூவுலகை விட்டு மறையும் காலம் வந்துவிட்டதென உணர்ந்து தன்னந் தனியனுகக் காட்டில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் தியானத்தில் மூழ்கியிருந்தவனை, மிருகங்களை வேட்டையாடிய வேடன் ஒருவனுடைய அம்பொன்று தைத்து, அவனுயிரைத் தூக்கிச் சென்றது. கிருஷ்ணனின் பூதவுடலிலிருந்து ஜோதி ஒன்று வெளியேறி விண்ணில் மறைந்தது.

இராமாவதாரத்தில் மறைந்து நின்று வாலியை அம்பெய்து வதம் செய்த கொடிய குற்றத்திற்குரிய தண்டனையைக் கிருஷ்ணவதாரத்தில் தனக்குத் தானே விதித்துக் கொண்டான் அவதார இரகசியம் அறிந்த கண்ணன்.

"பிராரத்துவ வினை பிறவிகள் தோறும் தொடர்ந்து வரும்" என்பதை மானுடருக்கு உணர்த்த கிருஷ்ணவதாரத்தில் ஸ்ரீ நாராயண மூர்த்தி செய்த கடைசி லீலை இதுவே.

ஓம் நமோநாராயணுய நம்ஹ.

★

# பிறவிப் பிணி தீர்க்கும் அன்னை காமாட்சி

நம் ஈழமணித் திரு நாட்டின் சிகரமாக விளங்கும் யாழ்ப்பாண நகரின், வண்ணார் பண்ணை குளக்கரை மருதடி ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம் என வழங்கும் (நாச்சிமார் கோவில்) இவ்வாலயத்தைப் பற்றிய விளக்கமான சரித்திர சாதனங்கள் இல்லாதிருந்த போதிலும், எம் மூதாதையரின் வாய் மொழியாகக் கூறப்படும் நிகழ்வுகளைக் கொண்டும், பண்டைய பாடல்களிலிருந்தும், 1898 ஆம் ஆண்டில் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அவர்களால் சைவ சமய, கிறிஸ்தவ கோயில்களின் பதிவு இடாப்பு தயாரிக்கப்பட்ட பொழுது இருந்த சில விபரக் கோவைகளைக் கொண்டும் இக்கிராம மக்களிடையே வழங்கி வரும் ஐதீக வரலாறுகளை ஆதாரமாகக் கொண்டுதான் இதன் சரித்திரத்தை உணர முடிகிறது.

கங்கையார் சடையானைக் காசினியில் பூசனை செய்
மங்கையார் காமாட்சி மாதேவி மருவுமிடஞ்
செங்கையில் நாச்சிமார் சிறுவிறகை யொடித்தாளின்
கொங்கையாய்ந் தொளிர் வண்ணை குளங்கரை சார்மருதடியே.

இப்பாடல் திரு. நமசிவாயம் சிவக்கொழுந்து அவர்களால் பாடப்பட்டது. அவர் வண்ணை காமாட்சியம்பிகை மேற் பாடிய பல பாடல்களும் உள்ளன.

அக்காலத்தில் இப்பொழுது ஆலயம் அமைந்திருக்கும் இடத்திற்கு அண்மையில் இருக்கும் குளங்கரையைச் சூழ நாவல் மரங்களும், மருத மரங்களும், செந்நெற் கழனிகளும் சூழ்ந்து அடர்ந்தன. ஒரு நாள் நண்பகல் வேளையில் விறகு ஒடிப்பதற்கு அயலில் குடியிருந்த இளம் பெண் ஒருத்தி அவ்விடத்திற்கு மாதவிடாய் காலத்தில் வந்து மருத மரத்தடியில் சிறுநீர் விட்டு அந்த இடத்தை அசௌகரியப்படுத்தியதால் அவ்விடத்திலிருந்த தேவதை கோபம் கொண்டு அவ்விளமங்கையின் கொங்கையைத் திருகி விட்டதாம். இதனால் கிராம மக்கள் பயத்துடன் வாழ்ந்தனர்.

இதை அறிந்த அவ்விடத்தில் வசித்து வந்த வயோதிபப் பெண் ஒருவர் அத் தேவதையைச் சாந்தப்படுத்தும் நோக்கமாக ஒரு கல்லை அம் மரத்தடியில் வைத்து விளக்கேற்றி "நாச்சிமார்" எனப் பெயரிட்டு வழிபாடு செய்து வந்தார். இதனைத் தொடர்ந்து கிராம மக்களும் வழிபாடு செய்து வந்தனர். இவ் வழிபாடுகளால் அருளைப் பெற்ற மக்கள் விக்கிரக வழிபாடாக வணங்குவதற்கு 1870 ம் ஆண்டு சிறு

—செல்வி. க. இந்திரகலா—

கற் கட்டிடமாக அமைத்து மாரியம்மன் சிலா விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்தார்கள். இவ் அயலில் விஸ்வகுல பொற்றொழிலாளர்கள் சூழ்ந்து வாழ்ந்தபடியால் அவர்களின் குலதெய்வமாகிய காமாக்ஷி அம்பாளையே வைக்கவேண்டுமென நினைத்து காமாட்சி அம்பாளையே பிரதிஷ்டை செய்ய முடிவு ஏற்பட்டது. இந்தியாவில் இருந்து காஞ்சி காமாட்சி அம்பாளின் அம்சங்களைக் கொண்ட சிலா விக்கிரகத்தை விஸ்வகுலப் பெரியார் க. வைத்திலிங்கம் பத்தர் அவர்கள் கொண்டு வந்து வைத்தார்கள். அந்த விக்கிரகம் தான் தற்பொழுது மூலஸ்தானத்தில் இருக்கும் விக்கிரகமாகும்.

( 31 ஆம் பக்கம் பார்க்க )

# திருமந்திரம்

மந்திரம் என்னும் சொல் சாதாரண மக்களிடையே மாயம், மயக்குவது என்னும் பொருளில் வழங்கி வருகின்றது. மந்திரம் நமக்கு விளங்காத தேவையற்ற விஷயம். அது யோகிகள் ஞானிகளுக்குரியது என்று படித்தவரும் கருதுகிறார்கள். இவ்வித கருத்தினால் அரும் பெரும் ஞானச் செல்வமாகிய திருமந்திரத்தினைக் கற்காது நாம் ஒதுக்கி விட்டோம். மேலும் திருமந்திரத் தமிழ் கடினமானது என்னும் கருத்தும் நிலவி வருகின்றது.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே'' என்னும் திருமந்திரத் தமிழ் புரியவில்லையா? மந்திரம் என்பது நினைப்பவரைக் காப்பது என்னும் பொருளையுடையது.

''நிறைமொழி மாந்தர் ஆணையில் திறந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப''
என்பார் தொல்காப்பியர்.

நிறைமொழி மாந்தர் பக்குவமுள்ள தம் சீடருக்கு மாத்திரம் (மற்றையோருக்கு மறைத்து) சொல்லியவையே மந்திரம் மேலும் மறையெனப்படும் வேதங்களின் உட்பொருளாயிருப்பதும் மந்திரமேயாகும்.

நடராச வடிவம் சூக்குமமாக உள்ள சைவ தத்துவங்களைத் தூலமாக விளக்கும் ஒப்பற்ற வடிவமாகும். நடராசனின் திருக்கரத்தில் உடுக்கை எனப்படும் சிறுபறை உண்டு. இது வட்ட வடிவமானது. இதிலிருந்து நாதம் பிறக்கிறது. இதுவே நாததத்துவம்.

இவற்றால் இவ்வுடுக்கை விந்துதத்துவத்துக்கு அடையாளமாகக் கொள்ளப்படுகின்றது. விந்துதத்துவத்திலிருந்து வரும் ஓசை உலகத்தைத் தோற்றுவிப்பதனால் அவ்வோசையைத் தோற்றுவிக்கும் உடுக்கை உலகத்தைத் தோற்றுவிக்கின்றது எனக் கூறுவர். இதனாலேயே ''தோற்றம் துடி அதனில்'' எனச் சைவசித்தாந்தம் கூறுகின்றது. இதனையே சிவஞானசித்தியார் ''வந்திடும் விந்துத்தன்பால் வைகரி சக்தி'' என விந்துதத்துவத்திலிருந்து சூட்சுமம, பைசந்தி, மத்திமை, வைகரி முதலிய நால் வகை வாக்குகள் தோன்றுகின்றன எனக் கூறுகின்றது. பின்னர் இவை 51 அட்சரங்களாக விரிகின்றன. இவ்வட்சரங்கள் பதமாகி மந்திரங்கள் ஆகின்றன.

பக்குவமுள்ள சீடன் இம்மந்திரங்களை குருவினிடமிருந்து முறைப்படி உபதேசமாகப் பெறுகின்றான். மூலாதாரத்துக்குரிய பீஜ அட்சரங்களை பக்குவமுள்ளவன் முறைப்படி நினைக்க மூலக்கனல் தோன்றுவதை உணரலாம். பிரமமந்திரத்துக்குரிய பீஜ அட்சரங்களை நினைக்க சகஸ்ரதளம் துடிப்பதை உணரலாம். அற்புதமான இவ்வனுபவங்களை வார்த்தைகளால் விவரிக்க முடியாது அனுபவித்து உணர வேண்டும். சமயம் ஓர் அனுபவம் ஓர் அனுபூதி.

— கலாநிதி, வித்துவான் க. ந. வேலன்

நமது ஞானப்பனுவல்களில் இவ்வனுபவங்களைப் பரக்கக் காணலாம்.

''அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன்''
என்பது மணிவாசகர் காட்டும் ஓர் அனுபவம்.

திருமூலர் இறையருளையும், அருளனுபவங்களையும் அதனை அடைவதற்கான வழியினையும், மந்திரமாகவும், தந்திரமாகவும் விளங்கியுள்ளார். தந்திரம் என்பது உண்மையை நேரே கூறாமல் அதில் கூறியபடி செய்தால் ஞானம் இயல்பாகவே பொருந்திவிடும் எனக் கூறும். இது இறைவன் நேரே காட்டாதபடியால் விட்ட லக்கணை எனக் கூறப்படும். 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி' எனத் தேவாரம் கூறும். 'பாழான என்மனம் குவியவொரு தந்திரம்.

# சாயி பாபாவின் அழைப்பு!



பிரசாந்தி நிலையத்தில் காலை தரிசனம், பஜனை முடிந்தபின் வெளிநாட்டவர்களின் நன்மை கருதி பகவான் பாபாவின் அற்புதங்கள், பகவத்கீதை, இராமாயணம், பாரதம், பாகவதம் போன்ற சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுவது வழக்கம்.

இவ்விரிவுரைகளை திரு. என். கஸ்தூரி(இப்போது இறைவன் அடிசேர்ந்துவிட்டார்.)திரு. கோபால்ராவ், திரு றகர் (Druckar) இவர் கலிபோர்னியாவைச் சேர்ந்தவர்.) போன்றோர் ஆற்றுவார்கள்.

வழக்கம் போல அன்றும் கதை கேட்கும் ஆர்வத்தில் வெளிநாட்டவர்கள் ஹாலில் கூடியிருக்கிறார்கள். அன்று திரு. றகர் தன் சொந்த வாழ்க்கையில் நடந்த சம்பவத்தை கூறினார்:

அமெரிக்காவில் கலிபோர்னியோவைத்திய சாலையில் டாக்டர்களால் "கான்சர்" என்று சொல்லி அனுமதிக்கப்பட்டேன்;

தாங்கமுடியாத வயிற்றுவலியினால் அவதிப்படும் போது எல்லாம், பகவான் பாபாவின் படத்தை தலைமாட்டில் வைத்துக் கொண்டு அவரிடமே சொல்லி முறையிட்டேன்:

— சாயி பிரியா —

"ஒப்பரேசன்" நாளும் வந்தது. பாபாவை வணங்கி விட்டு ஒப்பரேசனுக்கு தயாரானேன்.

"ஒப்பரேசன்" தொடங்கியதும் என் ஆவி என் உடலை விட்டு வெளியே வந்தது போன்ற ஓர் உணர்வு, மிகவும் சந்தோஷமாக இருந்தது. சத்திர சிகிச்சை நடப்பவைகளை மேலே இருந்து பார்த்துக் கொண்டிருந்தேன்; எல்லாம் முடிந்ததும் என் உயிர் திரும்பவும் உடலில் புகுவதை உணர்ந்தேன்.

டாக்டர்கள் ஆறு மாதத்திற்கு அறையை விட்டு அசையக் கூடாது என்று சொல்லி விட்டார்கள். டாக்டர்கள் சொன்னபடியே அறையைவிட்டு நான் வெளிவரவில்லை ஆறுமாதங்கள் முடிந்த பின் என் பெற்றோரிடம்,

"நான் பகவான் பாபாவைத் தரிசிக்க புட்டபர்த்திக்கு போகப் போகிறேன் - என்றேன். அதற்கு என் பெற்றோர்,

"இவ்வளவு பலவீனமான நேரத்தில் போக வேண்டாம்..." என்று தடுத்தனர்.

பெற்றோரின் பதில் எனக்கு மனத்திருப்தியைத் தரவில்லை. என் பெற்றோர் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து அறையை விட்டு வெளியே வந்தேன்; வீட்டின் முன்னால் உள்ள

★ அழகுசாதனப் பொருட்கள்
★ விளையாட்டுப் பொருட்கள்
★ அன்பளிப்புப் பொருட்கள்
★ கோல்ட் கவரிங் நகைகள்
★ நூல் வகைகள்

அம்பிகாபதி
பான்ஸி ரேடர்ஸ்

9A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

'' போஸ்ட் ஆபிசுக்கு போனேன். பகவான் பாபாவுக்கு தந்தி அனுப்புவதற்க்க தந்தி பத்திரம் ஒன்றை வேண்டினேன்.

'' ஸ்வாமி நான் புட்டபர்த்திற்கு வர விரும்புகிறேன், வரட்டுமா...?

இப்படிபாபாவிடம் அனுமதி கேட்டுஎழுதி னேன். அவ்வளவுதான்,

'' யார் இங்கு றகர் (Druckar) என்பவர், உங்களுக்கு ஒரு ரெலிபோன் கோள் வந்திருக் கிறது'' என போட்ஸ்மாஸ்டர், அவசரமாக அழைத்தார்.

'' நான் தான் றகர்... எங்கிருந்து ரெலி போன் வருகிறது''

'' இந்தியாவில் புட்டபர்த்தி என்ற இடத் திலிருந்து''

என்றபடி என்னிடம் ரிஸீவரைத் தந்தார் போஸ்ட்மாஸ்டர். எனக்கு சந்தோஷமிகுதி யால் உடலெல்லாம் புல்லரிக்க,

'' ஹலோ! நான் றகர் பேசுகிறேன்' என ஆவலுடன் எதிர்ப்புறத்தில் இருந்து வரும் பதி லுக்காகக் காத்திருக்கிறேன்.

' உடனடியாக நீங்கள் புட்டபர்த்திற்கு வரலாம். இது பகவான் பாபாவின் அழைப்பு'' என அந்த ரெலிபோன் செய்தி கூறியது. என் ஞல் ஆச்சரியத்தை அடக்க முடியவில்லை. நான் எழுதிய அதாவது, பகவானிடம் புட்டபர்த்திற்கு வரலாமா... என்ற தந்திப்பத் திரம் என்கையில் அப்படியே இருக்கிறது.

அதற்கான பதில் அழைப்புடன் கிடைத்து விட்ட அதிசயத்தைஎண்ணி, எண்ணி ஆனந்த மேலீட்டினுல் என்னை மறந்து, என்சத்திர சிகிச்சை நடந்த உடலை மறந்து வீட்டுக்கு ஓடினேன்.

புட்டபர்த்தி போவதற்கான எல்லா ஆயுத் தங்களையும் செய்தேன், சில நாட்களில் புட்ட பர்த்திபோய் சேர்ந்தேன். ஸ்வாமியின் '' இன்ரவியூ '' கிடைத்தது. சுவாமி சொன் ஞர்.

'' இது கான்சர் இல்லை. 'ரெரிபிள் அல்ஸர்' ஸ்வாமி எல்லாவற்றையும் மாற்றி விட்டேன்'' என்று பாபா கூறிஞர். நான் அதிர்ச்சியில் ஆனந்தக் கண்ணீர் வடித்தேன்.

எந்தவிதமான சந்தேகமும் இன்றி அவர் இறைவன்தான். அவரை முழுமையாக நம்பி அவர் பாதத்தில் சரணடையுங்கள்! நம் துன்பமெல்லாம் தீரும்: இது நான் உங்களுக்குத் தரும் நம்பிக்கை.

— றகர் தன் வாழ்வில் நடந்த உண்மைச் சம்பவத்தைக் கூறி முடிக்கிறுர்.



அச்சிலை அம்சமானது. தேவியின் இடது கைகளில் ஒன்றில் பாசமும், மற்றொன்றில் நீலோற்பவ புஷ்பமும், வலது கைகளில் ஒன்று அங்குசமும் மற்றொன்றில் கரும்பும் உள்ளன. அன்பையும், அருளையும், பாசமும், செழுமையையும், உணர்வையும் புஷ்பமும்: அரச சக்தியை அடக்கும் திரத்தை இங்குசமும், மன்மதனை வென்றதைக் கரும்பும், அபய வரதங்கள் பாதமாகவும் குறிப்பிடப்படுகின்றது


கிறிஸ்துவுக்குப் பின் 1887, 1926, 1967 ஆகிய ஆண்டுகளில் மகாகும்பாபிஷேகங்கள் நடை பெற்றன. 1986ம் ஆண்டு இராஜ கோபுரம் கட்டப் யெற்று மகா கும்பாபிஷேகமும் நடந்தது. நான்கு காலப் பூசையும் தவறாது நடை பெற்று வரும் இவ்வாலயத்தில் வருடா வருடம் நடை பெறும் பெரு விழாவாகிய கொடியேற்றம் முதல் சித்திரைப் பௌர்ணமிக்குத் தீர்த்தோற்சவம் நடை பெறும்.

மகோற்சவம் தொடங்குவதற்கு முன் மகா மாரியம்மன் கிராம ஊர்வலமும், அடுத்த நாள் குளிர்த்தியும் நடை பெறும். 1971 ம் ஆண்டு தொடக்கம் தேர்த்திருவிழா அன்று அம்பிகை தன் அழகிய சித்திரத் தேரிலேறி, பக்த கோடிகளுக்கு திருக்காட்சியளித்து, இஷ்டசித்திகளைக் கொடுத்தருளுகிறாள். இவ்வாலயத்தில் பன்னிரண்டு மாதங்களும், அம்மாதத்தில் வரும் விசேஷ தினங்களும் வெகு விமரிசையாக நடைபெறுகின்றன.

**மாணவ சமுதாயத்தை சமய சீலத்தில் ஈடுபடத் தூண்டுவதில் வீடும், பாடசாலையும் வகிக்கும் பங்கு என்ன?**

**இதுபற்றிய தமது கருத்தினை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றார். உடுவில் முருக மூர்த்தி வித்தியாலய துணை அதிபரும், பத்திரிகையாளருமான திரு. வி பரிபூரணாநந்த சர்மா.**

**கேட்டு எழுதியவர்: சி. அமிர்தலிங்கம்**



ஒவ்வொரு சமயத்தவருக்குமுள்ள சில ஒழுங்கு, விதிகள் போல ஒவ்வொரு இனத்துக்கும் சில பண்பாடுகளும் கலாச்சாரங்களும் உள. ஒரு இனம் 'இனம்', என மதிக்கப்படுவதற்கு அதற்கென்ற சில பண்பாடுகளும் கலாச்சார ஒழுக்கங்களும் அவசியம். சமய, இன பண்பாடு, கலாச்சார ஒழுக்கங்கள் பாதுகாக்கப்படவேண்டுமாயின் இளம் பராயம் முதலே அவற்றைக் கைக்கொள்ளப் பழகுதல் அவசியம்.

சிறு பிள்ளைகள் பாடசாலை செல்லுமுன் வீட்டில் இவற்றைப் பழக்குவதில் பெற்றோரின் பொறுப்பும் பங்கும் முக்கியமாகின்றது. வீட்டில் வளரும் குழந்தைக்கு பெற்றோரே சகலதுமாகின்றனர். அன்பின் உறைவிடமாகவும், வழிகாட்டிகளாகவும் விளங்கும் பெற்றோர் தம் குழந்தைகளுக்கு சகபாடிகளின் நட்பும் – செல்வாக்கும் ஏற்படமுன்பு – வெளியுலக தொடர்பும் அனுபவமும் கிடைக்குமுன்பு – சில நல்ல விதைகளை அவர்கள் மனதில் விதைத்துவிட வேண்டும். பெற்றோரின் சொல்லே அக்காலத்தில் பிள்ளைக்கு மந்திரமாகின்றது.

பெற்றோர் தாம் சார்ந்துநிற்கும் சமய ஒழுக்க நெறிகளை ஏனைய சமய ஒழுக்க நெறிகளை அவமதிக்க அல்லது வெறுப்படையச்செய்யக்கூடியவாறில்லாமல் பிள்ளைகளுக்கு ஊட்ட வேண்டும். பகைமை வளராமல் பண்பை வளர்த்து, ஏனைய மதங்களைவிட தம் மதமே மேலானது என்ற துவேசமின்றி, ஏனைய மத கலாச்சாரங்களுக்கும் மதிப்பளிக்கும் மனப்பக்குவத்தையும், சுயநலம், மத, இன துவேசம் போன்ற தீய குணங்கள் பிள்ளையை நெருங்கவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பிள்ளையின் உள்ளத்தில் உறங்கிக் கிடக்கும் நற்பண்புகளை மேலும் வளர்த்து பிறருக்கு உதவும் மனம், அன்பு, கொடுஞ்சொல் பேசாமை, மன்னிக்கும் பண்பு ஆகியவற்றை பெற்றோர் ஊட்ட வேண்டும். இதற்கு சமயக்கல்வியும் வழிபாடும் துணை செய்கின்றன.

மனிதன் ஒரு சமுதாய விலங்கு. ஏனையவர்களுடன் சேர்ந்து அவன் வாழ வேண்டியவனாக இருப்பதால் ஒழுக்கம், கட்டுப்பாடு அவசியமாகின்றது. இவ்வொழுக்கமும் கட்டுப்பாடும் சமய வாழ்க்கையாலும் வழிபாட்டாலுமே புகுத்தப்படுகின்றது. சமய வழிபாடு அன்பின் அடிப்படையில் வளர்வது அன்பின் உறைவிடமாக விளங்குபவர் அன்னை. எனவே அந்த அன்னையிடம் இருந்து பெறும் சமய வழிபாடு குழந்தைக்கு அவசியமாகின்றது. எந்தச் சமய வழியில் சென்றாலும் "தெய்வம்" என்ற நம்பிக்கை வீட்டிலேயே முதன்முதலில் வழங்கப்படுகின்றது. வீட்டில் கூட்டுப் பிரார்த்தனைகள், சமயச் சடங்குகள் (தைப்பொங்கல்' வருடப் பிறப்பு, தீபாவளி, விளக்கீடு, நவராத்திரி போன்றன) ஆகியவற்றில் பிள்ளைகளை ஈடுபடுத்துவதும், அவை சம்பந்தமான மரபுக் கதைகளை பிள்ளைகட்குச் சொல்லிக் கொடுப்பதும் பெற்றோரின் தலையாய கடமை.

குழந்தைகள் தான் நாளைய தலைவர்கள். பலகாலம் வாழப் போகிறவர்கள். வீட்டில் பெற்றோர்கள் காட்டும் சமய வழிபாடும் நற்பண்புகளுமே எதிர்கால சீரிய சமுதாய அமைப்பொன்றுக்கு இடும் அடிக்கல்லாக அமையும்.

# தன்மான எழுச்சிக் குரல்

**சமண பௌத்த தாக்கம்:**

தமிழரின் பாரம்பரிய சமய நம்பிக்கைகளும் வடமொழிப் பண்பாட்டுக் கூறுகளும் இணையத் தொடங்கிய சமகாலத்தில் வட நாட்டிலிருந்து வந்த சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களும் தமிழகத்தில் செல்வாக்கும் பெறத் தொடங்கி விட்டன. தமிழர் மத்தியில் அடிக்கடி நிகழ்ந்த போர்களாலும், உலகியல் வாழ்க்கைக்கு முதன்மை கொடுத்ததால் நிகழ்ந்திருக்கக் கூடிய பண்பாட்டுச் சீர்குலைவுகளாலும் பாதிக்கப்பட்டிருந்த தமிழகத்தில் நிலையாமையை முன்வைத்து அறம் போதிக்கும் சமண, பௌத்த மதங்கள் ஓரளவு செல்வாக்குப் பெறத் தொடங்கியமை வியப்புக்குரியதல்ல.

இத்தகைய சூழ்நிலையில் அரசியலிலும் முக்கிய மாற்றம் நிகழ்ந்தது. தமிழ்வேந்தராகிய சேர, சோழ, பாண்டியரின் ஆதிக்கம் நிலைகுலைந்து களப்பிரர் என்ற ஒரு புது மரபினர் அரசியலாதிக்கம் பெற்றனர். இவர்களை அடுத்துப் பல்லவர் என்ற புது மரபினரும் தமிழகத்துக்கு அறிமுகமாகின்றனர், இவர்களது ஆட்சிகளின் தொடக்கத்திலே பௌத்தமதம் அரசியலாதிக்கம் பெறுவதை வரலாற்றுச் சான்றுகள் உணர்த்தி நிற்கின்றன.

அக்காலப்பகுதிக்குரிய முக்கிய வரலாற்றுச் சான்றுகளிலொன்று வேள்விக்குடிச்செப்பேடு, இது 'அச்சுதவிக்கந்தன்' என்ற களப்பிர மன்னனைப்பற்றி அறியத் தருகிறது. இவன் சோழநாட்டுப்பகுதியில் ஆட்சிபுரிந்தவன்; பௌத்த மதத்தினன். மேற்படி காலப்பகுதிக்குரியதாக அறியப்படும் விநய வினிச்சம், அபிதம்மாவதாரம் ஆகிய பாளிநூல்கள் காவிரிப்பூம்பட்டினத்தில் பௌத்தமதம் பெற்றிருந்த உயர் நிலையை உணர்த்துகின்றன.

ஏறத்தாழ சமகால நூலாகக் கருதக் கூடிய தமிழ்ப்பேரிலக்கியமான மணிமேகலை அக்காலப் பகுதியில் காவிரிப்பூம்பட்டினம், மதுரை, காஞ்சிபுரம் ஆகிய நகரங்களில் பௌத்தம் பேணப்பட்ட நிலையை உணர்த்தி நிற்கின்றது. அந்நூலில் மணிமேகலை சமயவாதம் செய்து பிறசமயத்தினரை விளங்கிக் கொள்ள முயல்வதாக அமையும் செய்தியில் (சமயக்கணக்கர் தந்திறங் கேட்டகாதை) அன்றைய சூழலில் பல்வேறு மதங்களுடனும் பௌத்தம் தத்துவரீதியிற் போட்டியிட்டு நிறைநிலையைப்புலப்படுத்துவது. சோழநாட்டை அச்சுதவிக்கந்தன் ஆண்ட காலப்பகுதி காஞ்சிபுரத்தில் ஆட்சி புரிந்து பல்லவ மன்னர்களும் பௌத்த மதத்தை ஆதரித்து நின்றனர் எனத் தெரியவருகின்றது. புத்தங்குரன், புத்தவர்மன் என்ற பெயர்களைப் பூண்ட அக்காலப் பல்லவ மன்னர்கள் பௌத்த மத சார்பானவர்களாவர்.

**கலாநிதி நா. சுப்பிரமணியன்**

இவ்வாறு அறியப்படும் பல தகவல்களிலிருந்து கி. பி. ஐந்தாம் நூற்றாண்டளவில் தமிழ் நாட்டின் சமய நிலையில் பௌத்த மதமே அரசியல்லாதிக்கம் பெற்றுத் திகழ்ந்தது என்பது உய்த்துணரப்படுகின்றது. பௌத்தத்தின் இந்த உயர்நிலை அடுத்து வரும் நூற்றாண்டிற் சிறிது குறையவே சமணம் தலைதூக்கலாயிற்று; கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே தமிழகத்தின் வடக்கிலும் தெற்கிலும் ஆதிக்கம் செலுத்தியோரான பல்லவர்களும் பாண்டியர்களும் முதலில் சமண ஆதரவாளர்களாகவே அறியப்படுகின்றனர்.

பல்லவ மன்னனுன முதலாம் மகேந்திரவர்மன் (கி. பி 600— 630), கூன்பாண்டியன் —பின்னுளில் நின்றசீர் நெடுமாறனுன அரிகேசரி மாறவர்மன்— (கி பி 640-680) ஆகியோர் தம் வாழ்நாளின் முற்பகுதியில் சமணராக இருந்து பின்னுளில் சைவத்துக்கு வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கி. பி. 5 ஆம் 7 ஆம் நூற்றாண்டுகளில் பௌத்த, சமண மதங்கள் எய்தியிருந்த அரசியல் ஆதிக்கநிலை தமிழரின் பாரம்பரிய சமய நம்பிக்கைகளையும் அவை வடமொழிப் பண்பாட்டோடு இணைந்து எய்திய வளர்ச்சி நிலையையும் பாதித்திருக்கும் என்பதை உய்த்துணர்வது சிரமமில்லை. பெரியபுராணம் தரும் தகவல்களின் அடிப்படையில் நோக்கும் போது சமணரது ஆதிக்கம் சைவத்தைச் சீரழிப்பதில் கொண்டிருந்த முனைப்பு தெளிவாகப் புலனாகிறது.

சிவாலயங்களை அழித்து அவ்விடங்களிற் சமணப் பள்ளிகளை நிறுவுதல், சிவனடியார்களைத் துன்புறுத்துதல், சிவனடியார் தங்கியுள்ள மடங்களுக்குத் தீவைத்தல், சிவவழிபாட்டுக்குரிய பொருட்களை அடியார்கள் பெறவிடாது தடைகள் ஏற்படுத்துதல், சைவத்தை இகழ்தல் முதலியனவாக இச் சைவ அழிப்பு முயற்சிகள் அமைந்தன இவற்றை திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், மூர்த்தி நாயனார், நமிநந்தியடிகள், தண்டியடிகள் என்போரது வரலாறுகளில் இத்தகு அழிப்பு முயற்சிகளைப் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் கல்வியைக் காட்டி மதமாற்றம் செய்யும் நடைமுறையும் நிலவியது. நாவுக்கரசரின் வரலாறே இதற்குப் பொருத்தமான சான்றாகும்.

இத்தகையதொரு சூழலிலே பாரம்பரியமாகச் சைவத்தைப் பேணிநின்றோர் தமது நம்பிக்கைகள், ஒழுக்கமுறைகள், கிரியை நெறிகள், கலைமரபுகள் ஆகியவற்றைப் பேணிக் கொள்வதற்கு அரும்பாடுபட நேர்ந்திருக்கும். அந்நிய சமயம் சார்ந்த சமூக— பொருளாதார — பண்பாட்டுச் சூழலின் தாக்கங்களுக்கு மத்தியில் தமது சைவ வாழ்க்கையைக் கடைப்பிடிக்க அவர்கள் பல தியாகங்களைப் புரிய வேண்டிய நிலை இருந்திருக்கும். பல துன்பங்களை சுமக்கும் மனநிலை ஏற்பட்டிருக்கும். இவ்வாறான தியாகங்கள் புரிந்தவர்களின் செயற்பாடுகளே சைவ பக்திப் பேரியக்கம் ஆக முகிழ்ந்தது எனலாம். இந்த இயக்கத்தின் வெற்றி வரலாற்றையே பிற்காலத்தில் எழுந்த திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெரியபுராணம் பேசுகின்றது.

நாமார்க்கும்



குடியல்லோம்

இந்த வரலாற்றுக்குச் செயல் வடிவமாக அடியெடுத்துக் கொடுத்த முதல்வர்களுள் தனி முதன்மைவாய்ந்த ஒருவர் என்ற வகையில் நாவுக்கரசர் முக்கிய வரலாற்றுப் பாத்திரம் ஆகின்றார்.

அவர் முன்வைத்த தன்மானக் குரல் என்ற வகையிலேயே '' நாமார்க்குங் குடியல்லோம்...'' என்ற மறுமாற்றத் திருத் தாண்டகம் வரலாற்று முக்கியத்துவம் உடையதாகிறது. இதனை விரிவாக நோக்குவதினூடாகத் தமிழ் நாட்டின் சைவபக்தி இயக்கத்தின் வரலாற்றைத் தரிசிக்கலாம்.

வளரும்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும்
போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே
— அப்பர்.—

# பரராசசேகரப் பிள்ளையாரும் குளிர்ச்சியும்

பாரெல்லாம் புகழ் மணக்கும் பரராசசேகரப் பிள்ளையாரைத் தெரியாதவர்களே இல்லை. இணுவையம் பதியில் இனிதிருந்து அடியார்களுக்கு இன்னருள் பாலிக்கும் அவன் புகழ் பேசி முடியாது. அல்லலின்றி அருவினை தானுமின்றி அடியார்கள் தத்தம் கடமைகளைச் செய்து வருகின்றனர். ''உண்டி கொடுத்து உயிர் வளர்க்கும்'' பண்புடையவர்களே பரராசசேகரப் பிள்ளையாரின் அடியவர்கள்.

''நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்றீயின்
படமாடுங் கோயில் பரமர்க்கதமே''

-என்பது திருமந்திரம். நடமாடுங்கோயில்களே அடியவர்கள். அவர்களுக்குச் செய்யும் பணி ஆண்டவனுக்குச் செய்யும் பணியே. இதனை நன்கு உணர்ந்தவர்கள் விநாயகப் பெருமானின் அடியவர்கள்.

எனவே, இணுவைச் ஸ்ரீ பரராசசேகரன் ஆலயத்தில் ஆண்டு தோறும் வரும் பங்குனி மாதத்து உத்தர நட்சத்திரத்தில் திருக்குளிர்ச்சி நடைபெற்று வருகிறது. இதனைப் பரராசசேகரனுக்கு வழித் தொண்டு புரியும் அடியார்களே செய்து வருகின்றனர். திருக்குளிர்ச்சிக்கு இரு தினங்களுக்கு முன்பே வேண்டிய ஆயத்தங்களை ஒழுங்கு முறையில் அடியவர்கள் செய்து முடித்து விடுவர். அன்றைய தினம் கோலாகலமாக வைபவம் இடம்பெறும். ஒவ்வொரு அடியவரும் தத்தம் கடமைகளைத் தமக்குப் பொருத்தமாகத் தேர்ந்தெடுத்துச் செய்துவிடுவர். ஏற்றத் தாழ்வுகளோ, குறை குற்றங்களோ கண்டு பிடிக்க முடியாது. விநாயகப் பெருமான் தலைமையில், தம்மை ஒரு கருவியாகப் பயன்படுத்தி அடியார்கள் நடந்துகொள்வர். நான், எனது என்ற முனைப்புகளுக்கு இடமில்லை. விநாயகப் பெருமானையன்றித் தலைமைக்கு யாருமில்லை. வயது வந்தோரும், இளைஞர்களும், பெண்களும், சிறுவரும் ஏதோ வகையில் திருப்பணியில் வழிநடத்தப்படுவது அப்பெருமானுடைய திருவருளன்றி வேறு யாது?


அண்மையில் அதாவது (8.4.90 ஞாயிற்றுக் கிழமை) பெருமானுக்குத் திருக்குளிர்ச்சி நடைபெற்றது. அன்றைய தினம் விசேடமாக அமைக்கப் பெற்ற யாகசாலையில் யாகம் வளர்த்துச் சங்காபிடேகமும் விசேட பூசைகளும், உபசாரங்களும் நடைபெற்றன.

விநாயகப் பெருமான் கைலாய வாகனத்தில் வீதியுலா வந்தமை கண்கொள்ளாக் காட்சியாகும். பக்தர்கள் பரவசமாய்ப் பாடிப் பின்னே வரப், பெண்கள் கற்பூரச் சட்டியுடன் முன்னே நடந்துவர, மங்கலவாத்தியங்களுடன் விநாயகப் பெருமான் பவனி வந்தார். பின்பு அடியார்கள் யாவரையும் அன்புடன் அரவணைத்து ஆதரவாக உணவளித்து உபசரித்தமை உள்ளத்தை உருக்கும் காட்சியாகும்.

— மா. இராசரத்தினம் —

இதற்குப் பொறுப்பு யார்? இதனை நடத்துகிறவர்கள் யார்? என்றெல்லாம் சிந்திக்கமுடியாதுள்ளது. எல்லோருமே நான் முந்தி நீ முந்தி என்று திருப்பணி வேலைகளைச் செய்கின்றனர். இத்துணைச் சிறப்பினை யாம் எங்கேயும் பார்த்ததில்லையென்றே கூறலாம். இறைவனைக் குளிரவைத்து, அடியவர்களைக் குளிரவைக்க நாடு குளிரும், நன்மைகள் விளையும், மக்கள் சந்தோஷமாக வாழ்வார்கள் என்பதே இக்குளிர்ச்சியின் நோக்கமாகும். ஸ்ரீ பரராச சேகர விநாயகர் அருள் எல்லோருக்கும் கிடைப்பதாக.

அழகிற்கு அழகு செய்யும்
அழகிய தங்கப்பவுண் நகைகளுக்கு



# சோபனா ஜுவல்லறி

**116V, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

நவநாகரீக டிசைன்களுக்கு
உத்தரவாதத்திற்கு
உறுதியான வேலைக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்
ஓடர் நகைகள் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்.

# ரூபி ஜுவல்லறி

**111/ 1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# ஞானக்கொழுந்து

உயிர்கள் ''மண்ணில் நல்ல வண்ணம் வாழ'' வேண்டியதை அறமாகக் கொண்ட திருஞானசம்பந்த சுவாமிகளின் வாழ்க்கை நம் ஒவ்வொருவரின் சித்தத்தையும் சிவன்பால் ஈர்க்கும் வன்மையுடையது.

''மகன் தந்தைக்காற்றும் உதவியிவன் தந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.'

என்ற குறளுக்கொப்ப, சிவபாதவிருதயர் இறைவனைக் குறித்து தவமிருந்து பாக்கியத்தை, வேண்டிப் பெற்றார்.

யாருக்கு கேட்கவில்லை. ''தொழுவார்க்கிரங்''கும் ஈசன் அழுவார்க்கும் இரங்குவான் எனக் காட்ட வேண்டி மலைமகள் பாகத்தனாக, இடபத்தில் தோன்றினான்.

மானிடப்பிறவி எடுத்த குழந்தையின் மனதில் மலம் கழுவ எண்ணினான் கழுமலத்தீசன். ஞானப்பாலை ஊட்டும்படி உமையைக் கேட்டுக் கொண்டான். இதெல்லாம் எத்துணை பெரும் செயல்கள். உமையம்மையார் வழங்கிய பாலை, ஞானமுதத்தைப் பருகுகிறார் ஞானசம்பந்தர். அனைத்துக் கலைஞானத்தையும் ஓதாது

## முகப்புச் சித்திர விளக்கம்

இதை ''பரசமயம் நிராகரித்து நீறுக்கும் புனைமணிப் பூண் காதலனைப்பெறப் போற்றும் தவம் புரிந்தார்.'' என சேக்கிழார் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தரது பிறந்த நக்ஷத்திரம், இறைவனது பெருநாளாகிய திருவாதிரையே. இதையும், இறையருளாகிய மெய்ஞ்ஞானத்தையும் மனதில் எண்ணி அதையே பிரதிபலிக்கும் பெயராக தன்மகனுக்குச் சிவபாத விருதயர் சூட்டினார் போலும்! சுவாமிகளின் திருவியமகப் பதிகத்தில்

''உற்றுமை சேர்வது மெய்யினையே'
உணர்வது நின்னருள் மெய்யினையே''

என்பதில் இறையருளாகிய ஞானம் வலியுறுத்தப்படுவது காணப்படும்.

மூன்றாவது வயதில், தந்தையாருடன் பிடிவாதமாக நீராடும் துறைக்குச் சென்று, அங்கு தந்தை நீரில் மூழ்கி எழுவதற்கிடையில் கண்ணீர் மல்கிக் கைகளைப் பிசைந்து ஆலயத்தை நோக்கி அழுதார். ''அம்மையே, அப்பா'' என்ற சொற்களைக் கேட்டான் இறைவன். ஆனால் அந்த அழுகை தந்தை உணர்ந்து விடுகிறார், ''திருநெறிய தமிழ் வல்ல'' திருஞானசம்பந்தராகிறார். இத்தகைய பேறுபெற்ற குழந்தை அப்பொழுது செயற்கரிய செயல் செய்தது. ''சக்தி இல்லாது சிவமில்லை. சிவமில்லாது சக்தியில்லை என்று தெரிந்து கொண்டது. நீராடிக்கரையேறியதும் தன் குழந்தையின் வாயில் பால் படிந்தி

— செ. ந. நடராசன் —

ருக்கக் கண்ட தந்தையார் மைந்தனை அதட்டி நடந்ததைக் கூறும்படி கேட்கவும், திருஞான சம்பந்தர் ''தோடுடைய செவியன்'' எனப் பண்ணமைந்த செந்தமிழ் பாடலைப் பாடிக் கொண்டு தந்தைக்கு இறைவனது ஆலயத்தைச் சுட்டிக் காட்டினார். மூன்று வயதும் நிரம்பாத இவரை ''தவமுதல்வர்'' என சேக்கிழார் கூறுவது பொருத்தமே. ★

மில்க்வைற் நீல சோப்
வாங்கும் பொழுது
சிறந்த சலவைச் சோப்பை
வாங்குகிறீர்கள்
அன்றும் இன்றும் மில்க்வைற்
சிறந்தது — சிக்கனமானது!!




ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம்,
உக்கிர நீதிகள், ஒவ்வொன்றிற்கும்
மில்க்வைற் மேலுறைகளிலிருந்து 25 திருக்குறள்
அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77 யாழ்ப்பாணம்.

---

- அழகு சாதனப் பொருட்கள்,
- சாய்ப்புப் பொருட்கள்
- தையல் - பூவேலை உபகரணங்கள்,
- நூல் வகைகள்

மொத்தமாகவும் — சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்

# "அம்பிகாபதி பான்ஸி குட்ஸ்"

66, கிராண்ட் பஸார், யாழ்ப்பாணம்.
தொ. பே: இல: 23437

## சிரணி நாகபூஷணி
## தேரெழில் காணீர்
## பேரருள் பெறுவீர்!

நயினை நாகபூசணியே எழுந்தருளி வந்து பக்தர்களுக்கு அருள்
சுரக்கும்சிரணி நாகபூசணி அம்பாள் என்பது வரலாறு.
மங்கையர்களுக்குத் தாலி பாக்கியம், புத்திர
பாக்கியம், வழங்கி, நாகதோஷம் நவக்கிரக
தோஷம் நீக்கும் அம்மையின் தேர்த்
திருவிழா, தீர்த்தத்திருவிழா சிறக்க
நமது வாழ்த்துக்கள்.

# விளம்பர அன்பளிப்பு

நியூ விநாயகர் ஸ்ரோர்ஸ் — உரிமையாளர்: க. நாகேஸ்வரா

திருமொழி அச்சகம் — சங்கானை உரிமையாளர்; S. திருநாவுக்கரசு

துர்க்கா வெல்டிங் வேக்ஸ் — சிரணிசந்தி

லக்ஷ்மி சோதிட நிலையம் ஐயனார் கோவிலடி சண்டிலிப்பாய்
கணிப்பவர்: கோ. சொ. கோவிந்தராஜன்
(பாலபண்டிதன்)

சேகர்ஸ் சென்ரர்— சண்டிலிப்பாய்

நவகுமரன்ஸ் மருந்துக்கடை — மானிப்பாய்

ஹோட்டல் மல்லிகா கிறீம் ஹவுஸ் — மானிப்பாய்

லீலா ஸ்ரோர்ஸ் அண்ட் பேக்கரி — சண்டிலிப்பாய்

நம்பிக்கை
நாணயத்தின்
சின்னம் → ஷப்ரு

நிலையான முதலீடுகள்
கீழ்கண்ட வட்டி வீதங்களில்
வரவேற்கப்படுகின்றன

| 6 மாதங்கள் | 1 வருடம் | 2 வருடங்கள் | 3 வருடங்கள் |
|---|---|---|---|
| 18% | 20% | 23% | 24% |

நிதித்துறையில் உங்கள் நண்பன்

மேலதிக விபரங்களுக்கு;

**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெ**

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு-4.
தொலைபேசி: 589310, 500576

207, மின்சார நிலைய
யாழ்ப்பாணம்.